பக்கங்கள்:-பன்னிரண்டு

*Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி

விலை ரூபா. 7.00

VALAMPURI

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 ஆடி 02 சனிக்கிழமை (17.07.2004) தொலைபேசி - 2223378 ஒலி 211

ராம்கோ சிமெந்து

MADRAS CEMENTS LTD


RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## கும்பகோணத்தில் தீ அனர்த்தம்



# பாடசாலை சிறுவர்கள் 100 பேர் உடல்கருகிப் பலி



(சென்னை)

இந்தியா கும்பகோணத்தில் நேற்று இடம்பெற்ற தீ விபத்தில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட பாடசாலைச் சிறுவர்கள் உடல்கருகிப் பலியாகினர்.

கும்பகோணம் நகரின் மையப் பகுதியில் காசிராம் தெருவில் செயல்பட்டுவரும் ஸ்ரீ கிருஷ்ணா பெண்கள் உயர் நிலைப் பள்ளிக் கட்டடத்தில் சரஸ்வதி நர்சரி பள்ளியும் செயல்பட்டு வருகின்றது. மூன்று மாடிகளைக் கொண்ட இப்பள்ளிக் கட்டடத்தில் முதலாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்புவரை பயிலும் குழந்தைகளுக்கு மூன்றாவது மாடியில் வகுப்புக்கள் நடத்தப்பட்டன.

இந்த மேல் தளத்தின் கூரை ஓலைகளால் வேயப்பட்டிருந்தது. நேற்று முற்பகல் பதினொரு மணியளவில்

(12ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட

# ஜனாதிபதி படையினருக்குக் கடும் உத்தரவு!



## சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

**தமிழீழ விடுதலைப்புலிகளுடன் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு அதற்கான நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படும்வரை அரசாங்கம் காத்திருப்பதாக இலங்கை அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் நாயகம் ஜயந்த தனபால தெரிவித்துள்ளார்.**

கிழக்கு மாகாணத்தில் அண்மைக் காலமாக இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்களை அடுத்து அது தொடர்பாக ஆராய்வதற்கு நேற்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்த அரசின் சமாதான செயலக பணிப்பாளர் நாயகம் ஜயந்த தனபால, யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அம் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

சமாதானப் பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரல் தயாரிப்பில் அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்பட்டவுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும்.

(12ம் பக்கம் பார்க்க)

## பார்வையாளர் கலரி மூடப்படும்

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் பார்வையாளர் கலரியை மறு அறிவித்தல் வரை மூடிவைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் ஜே.எம்.லொக்கு பண்டாராவுக்கும் சில பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பொன்றிலேயே

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடன் சமாதானப்பேச்சுக்கு அரசு தயார்

# எதிரணியினரின் பொய்ப் பிரசாரம் எடுபடாது!

(லண்டன்)

சமாதானம் முயற்சிகள் குறித்து லண்டனிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துவரும் கருத்துக்கள் வரவேற்கப்படவேண்டியவை என இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனுக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு அங்கு சென்ற கதிர்காமர் பிரிட்டன பாராளுமன்ற அமைச்சர்களைச் சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு அரசு தயாராக இருப்பதாக கதிர்காமர் கூறியுள்ளார். சில அரசியல் கட்சிகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் பொய்ப

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பு சூட்டுச் சம்பவம் விசாரணைகள் நேற்று ஆரம்பம்

(அக்கரைப்பற்று)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக சிறைச்சாலை அதிகாரிகளால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சிறைச்சாலை ஆணையாளர் புருமி மர்யூத்தினால் மட்டக்களப்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள சிரேஷ்ட சிறைச்சாலை அத்தியட்சகர் சி.தனசிங்க நேற்றுமுதல் விசாரணைகளை ஆரம்பித்துள்ளார்.

இதன்போது சிறைச்சாலையினுள் எவ்வாறு துப்பாக்கி எடுத்துச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சின் அடிப்படையை

## சிறைச்சாலையினுள்

சமாதானம் முயற்சிகள் குறித்து லண்டனிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துவரும் கருத்துக்கள் வரவேற்கப்படவேண்டியவை என இலங்கை வெளிவிவகார அமைச்

வித்துள்ளார்.

பிரிட்டனுக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு அங்கு சென்ற கதிர்காமர் பிரிட்டன பாராளுமன்ற அமைச்சர்களைச் சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் இதனைத்

தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு அரசு தயாராக இருப்பதாக கதிர்காமர் கூறியுள்ளார். சில அரசியல் கட்சிகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் பொய்ப

(12 ஆம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக சிறைச்சாலை அதிகாரிகளால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சிறைச்சாலை ஆணையாளர் புருமி மர்யூத்தினால் மட்டக்களப்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள சிரேஷ்ட சிறைச்சாலை அத்தியட்சகர் சி.தனசிங்க நேற்றுமுதல் விசாரணைகளை ஆரம்பித்துள்ளார்.

இதன்போது சிறைச்சாலையினுள் எவ்வாறு துப்பாக்கி எடுத்துச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானப் பேச்சின் அடிப்படையை அரசு மக்களுக்கு விளக்கவேண்டும்

**ரில்வின் சில்வா கோரிக்கை**

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடரப்படவுள்ள பேச்சுவார்த்தை இறுதித் தீர்வை அடிப்படையாகக் கொண்டதா அன்றி இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை அடிப்படையாகக் கொண்டதா என மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் ரில்வின் சில்வா கேள்வி எழுப்பியுள்ளார்.

தொடரப்படவுள்ள சமாதானப் பேச்சுக்கள் குறித்தும் சமகால அரசியல் நிலைப்பாடுகள் குறித்தும் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

எதிர்காலத்தில் தொடரப்படும் பேச்சுக்கள் மேற்குறிப்பிட்ட எந்த இலக்கை நோக்கி நகரவேண்டும் என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும். இதற்காக மக்கள் விருப்பங்களை அறிதல் அவசியம். இதுவே ஜே.வி.பி.யின் நிலைப்பாடும் கூட.

இது குறித்து சகல பாராளு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சிறைச்சாலையினுள்

# சச்சி மாஸ்டருக்கு வந்த ஆயுதங்களை நானே பாதுகாப்பாக வைத்திருந்தேன்!

## கொலையாளி புவிதரன் பொலிஸாரிடம் வாக்குமூலம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலைக்குள் ஆயுதங்கள் எவ்வாறு எடுத்து வரப்பட்டது என்ற தகவல்கள் வெளியாகியுள்ளன.

இத்தகவலை கொலையாளியான மகேந்திரன் புவிதரன் நேற்று பொலிஸாருக்கு அளித்த வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒருமாதத்திற்கு முன்பு சச்சிமாஸ்டருக்கு வந்த பொதியொன்றிலேயே தன்னிடமிருந்த கைப்பற்றப்பட்ட கைத்துப்பாக்கியும், கிரனைற்றுகள், சைனைற் வில்லை, கையடக்கத் தொலைபேசிகள் என்பனவும் இருந்ததாக அவர் தெரிவித்தார். தான் சச்சி மாஸ்டருடன் சகஜமாக பழகியதால் அவருக்கு வந்த ஆயுதப் பொருட்களை தன்னிடம் ஒப்படைத்து பாதுகாப்பாக வைத்திருக்குமாறு கூறியதாகவும் அவர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்தார்.

அதனை ஏற்றுக்கொண்ட நான் அனைத்து பொருட்களையும் என் பாதுகாப்பிலேயே வைத்திருந்தேன் என்றார். சிலநாட்கள் சென்றபின் அவரை இராணுவ பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் இராணுவத்தினர் எனப் பலர் வந்து சந்தித்து செல்வது வழக்கமாகியது. இந் நடவடிக்கைகள் எனக்குப் பிடிக்கவில்லை. அவரின் நடவடிக்கைகள் தமிழ்த் தேச துரோக நடவடிக்கையாகவே எனக்குத் தோன்றியது.

அவர் தமிழினத்துக்கு துரோகமிழைப்பது எனக்குத் தெரியவந்ததையடுத்து சச்சிமாஸ்டரை கொலை செய்யவேண்டுமெனத் தீர்மானித்தேன். அதன்படியே அவரையும் அவரது சகாவையும் சுட்டுக் கொன்றேன் என்றார்.

தான் எந்த இயக்கத்தையும் சார்ந்தவன் அல்ல, நான் ஒரு தமிழன் எனப் பொலிஸாருக்குத் தெரிவித்தார்.

சச்சிமாஸ்டருக்கு ஆயுதம் வந்தமை தொடர்பாக தனக்கும் சுட்டுக்கொல்லப்பட்ட தீபனுக்கும் தான் தெரியும் என தனது வாக்கு மூலத்தில் தெரிவித்தார்.

சந்தேக நபர் நேற்று மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் நீதிபதி என்.எம்.எச்.அச்வின் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

அவரை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை மட்டக்களப்புச் சிறைச்சாலையில் தடுத்துவைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(ச)

# சேனாதிராஜா எம்.பி. தலைமையில் மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டம்

(அலுவலக நிருபர்)

யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நீண்ட இடைவெளிக்குப்பின் முதன்முறையாக நேற்று முற்பகல் 11.00 மணிக்கு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட எம்.பி. சேனாதிராஜா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் யாழ். மாவட்டத்திற்கான பன்முகப்படுத்தப் பட்ட வரவுசெலவுத்திட்ட நிதி ஒதுக்கீடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் 2003 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் 2004 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படக்கூடிய அபிவிருத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அதிகரித்த உரப் பாவனையே குடிநீர் உவராக மாறக் காரணம்

## மழைநீரைப் பக்குவப்படுத்தப் பழகினால் நீர்த் தட்டுப்பாடின்றி வாழலாம்—பேராசிரியர் மோகனதாஸ்

**யாழ்ப்பாண மக்கள் அளவுக்கதிகமான இரசாயன உரவகைகளைப் பயன்படுத்துவதால் இங்குள்ள நீரில் உவர்த்தன்மை அதி கரித்துவருகின்றது. இதனால் குடாநாட்டில் குடிநீருக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுவருகின்றது.**

**எனவே மழைநீரைச் சேகரித்துப் பாவிக்கும் முறைக்கு எமது மக்கள் தம்மைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டிய தருணம் வந்து விட்டது.**

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்றையதினம் நடைபெற்ற மழை நீர் சேகரிக்கும் திட்டம் குறித்த கருத்தரங்கில் உரை நிகழ்த்தும் போது தெரிவித்தார்.

இலங்கை மழை நீர் சேகரிப்பு மையத்தின் ஏற்பாட்டில் இணைப்பாளர் சுஜித்சிரோமன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் அங்கு தொடர்ந்தும் உரையாற்றும் போது,

நீர் எமக்கு வழங்கப்பட்டுள்ள மிகவும் பெறுமதிமிக்க வளமாகும். இதனை நாம் உரிய முறையில் பயன்படுத்தத் தவறிவருகின்றோம். மழை மூலம் கிடைக்கின்ற நீரை நாம் உரிய முறையில் பயன்படுத்த வேண்டும். நாட்டின் ஏனைய இடங்களில் இருக்கும் மக்கள் தாம் பயன்படுத்தும் நீருக்குக் கட்டணம் செலுத்தி வருகின்றனர். ஆனால், யாழ்ப்பாணத்தில் இருக்கும் நாம் நீருக்கான கட்டணத்தைச் செலுத்துவதில்லை.

வருடாவருடம் இங்கு சுமார் ஆயிரத்து 300மில்லிமீற்றர் மழை நீர் கிடைக்கின்றது. ஆயினும், நாம் அதில் மிகவும் குறைந்த அளவினையே பயன்படுத்துகின்றோம். அவுஸ்திரேலியாவில் இருக்கின்ற ஒவ்வொரு வீடுகளிலும் மழை நீரைச் சேகரிக்கும் திட்டம் அமுல்செய்யப்பட்டு வருகின்றது.

திட்டமிடப்படாத செய்கைகள் காரணமாக நாம் அளவுக்கதிகமான இரசாயன உரப்பாவனை மேற்கொள்கின்றோம். எனவே நீரைப் பற்றிய நல்ல அறிவை நாம் பெற்றுக்கொள்ளவேண்டும். அந்த வளத்தினை சரியான முறையில் பயன்படுத்த முன்வரவேண்டும். இரசாயன உரப்பாவனை மேலும் அதிகரிக்குமாயின், சுற்றுச்சுழல் அச்சுறுத்தல் மேலும் மோசமடைவதுடன், நாம் சுவாசிக்க முடியாதநிலையும் ஏற்படும்.

எனவே யாழ்ப்பாணக் குடாநாட்டின் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க நாம் முன்வர வேண்டும். நிலத்துக்கடியில் இருக்கும் நீர் மேலும் உவராகாமலும், அசுத்தமடையாமலும் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு எமக்குண்டு என்றார்.

யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதி பொறியியலாளர் பொ.விக்கினேஸ்வரன் அங்கு உரையாற்றும்போது,

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நீரின் தன்மை மிகவும் மோசமாகப் பாதிப்படைந்து வருகின்றது. மழைநீரைச் சேகரிக்கும் திட்டம் எமக்குப் புதியதல்ல. நாம் நிலத்தடி நீரை நம்பி இருப்பவர்கள். இருப்பினும் எமது நிலத்தடி நீர் கெட்டுவருகிறது. இது உப்பாகவும், உவராகவும் மாறிவருகின்றது.

நிலத்தடி நீர் மாசடைவதற்கு எம்மால் நிர்மாணிக்கப்படும் மலசலகூடங்களும் ஒரு காரணமாகும். எனவே நாம் இப்போதுள்ள மலசலகூட முறையை மாற்றிப் புதிய முறையில் அமைக்க வேண்டும். இது குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். மக்களை எழுச்சிகொள்ளச் செய்ய வேண்டும்.

நாம் எமது பிரதேசத்து நீர் வளத்தைப் பாதுகாக்க வேண்டிய தருணம் வந்துள்ளது. மழைநீர் சேகரிப்பு அமையத்தின் சார்பில் வடக்கு -கிழக்கு மாகாணத்திலுள்ள 8 மாவட்டங்களிலும் மொத்தமாக 100 தொட்டிகள் முன் மாதிரியாக அமைக்கப்படுகின்றன. இதில் எமது மாவட்டத்தில் 12 அமையவுள்ளது என்றார்.

இக் கருத்தரங்குடன் மழை நீர் சேகரித்தல் பற்றிய கண்காட்சியும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். (உ-16)





பொன். கணேசமூர்த்தியின்

துளித்துளி வைரங்கள்..

கவிதை நூல்

வெளியீட்டு விழா

இடம்:

யாழ்.ப.நோ.கூ.சங்கக் கேட்போர் கூடம் யாழ்ப்பாணம்.

காலம்:

17.07.2004, சனிக்கிழமை பி.பகல் 2.30 மணி (பழைய நேரம்)

நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| அகவணக்கம் | |
| தமிழ்த்தாய் வாழ்த்து | |
| வரவேற்புரை | திரு. சங்கர்வாமன் (இயக்குநர் ஏசியன் அக்கடமி) |
| தலைமையுரை | திரு. சி. சிவமகாராசா |


### உள்ளூராட்சி வார கட்டுரைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியொன்று இன்று 9.00 மணிக்கு யா/ மல்லாகம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே வழங்கப்பட்ட தலைப்புக்களில் விரும்பியதொரு தலைப்பின் கீழ் ஏ,பி,சி என்ற மூன்று பிரிவாக இப் போட்டி நடைபெறவுள்ளது.

ஏற்கனவே விண்ணப்பங்களை சமர்ப்பித்த மாணவர்கள் பாடசாலை அதிபரிடமிருந்து சுட்டெண்ணை தெரிந்து கொள்ளுமாறு உள்ளூராட்சி வார இறுதிநாள் நிகழ்வின் போது வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கப்படும் எனவும் வலி வடக்கு பிரதேச சபையின் செயலாளர் அறிவித்துள்ளார். (உ)

### முத்தமிழ் விழா


(யாழ்ப்பாணம்)

யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் முத்தமிழ் மன்ற ஏற்பாட்டில் எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு விபுலானந்தர் தினமும் முத்தமிழ் விழாவும் இடம் பெறவுள்ளது.

### சமூகக்கல்வி போட்டி

(கோப்பாய்)

கோப்பாய்க் கோட்ட மட்ட பாடசாலைக்கிடையேயான சமூகக் கல்விப் போட்டி நிகழ்ச்சிகள் எதிர் வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாகக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (உ-79)



17.07.2004, சனிக்கிழமை பி.பகல் 2.30 மணி (பழைய நேரம்)

## நிகழ்ச்சிகள்

அகவணக்கம்

தமிழ்த்தாய் வாழ்த்து

வரவேற்புரை — திரு. சங்கர்வாமன்
(இயக்குநர் ஏசியன் அக்கடமி)

தலைமையுரை — திரு. சி. சிவமகாராசா
(தலைவர் - ப.நோ.கூ.சங்கம், தெல்லிப்பழை.
நிர்வாக இயக்குநர், 'நமது ஈழநாடு')

வாழ்த்துரை — திரு. மாவை. சேனாதிராசா
(நாடாளுமன்ற உறுப்பினர், யாழ்.மாவட்டம்)
திரு. சொலமன் சூ. சிறில்
(தலைவர் ப.நோ.கூ. சங்கம் யாழ்ப்பாணம்)
கலாநிதி க. குணராசா
(செங்கை ஆழியான், பிரதேச செயலர், வலி வடக்கு)
திரு. ந. விஜயசுந்தரம்
(பிரதம ஆசிரியர் வலம்புரி)

வெளியீட்டுரை — திரு. சி. இளம்பரிதி
(பொறுப்பாளர், அரசியல்துறை,
யாழ்.மாவட்டம்)

முதற்பிரதி வழங்கல் — பெறுநர் திரு. சி. எழில் அன்பன்
(மாணவர் அமைப்பு - யாழ்.மாவட்டம்)

சிறப்புப் பிரதிகள் வழங்கல்

மதிப்பீட்டுரை — திருமதி மனோன்மணி சண்முகதாஸ்
(வருகை ஆய்வாளர் கச்சுயின் பல்கலைக்கழகம்
யப்பான்)
திரு. ஆ. தங்கவேலாயுதம்
திரு. ப. பரமநாதபிள்ளை
(செயலாளர், தமிழ்ச்சங்கம், கிளிநொச்சி)
திரு. ஐ. சாந்தன்

ஏற்புரை — திரு. பொன். கணேசமூர்த்தி

நன்றியுரை — திரு. க. அமரசிங்கம்
(ஆளனி மேலாளர், தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்)

**வந்துகலந்து விழாச்சிறக்க வைக்கும் வண்ணம்**
**அன்பிற்கனிந்து அழைப்பு விடுக்கும்.....**

(C-373)

- தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்க சமூகம்.

## முத்தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் முத்தமிழ் மன்ற ஏற்பாட்டில் எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு விபுலானந்தர் தினமும் முத்தமிழ் விழாவும் இடம் பெறவுள்ளது.

பாடசாலையின் அழகரட்ணம் மண்டபத்தில் யே.எட்விட் ஜெயராஜ் தலைமையில் இடம் பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலாநிதி க. சொக்கலிங்கமும் சிறப்பு விருந்தினராக ஜப்பான் பல்கலைக்கழக வருகை ஆய்வாளர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், தமிழீழ கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை ஆகியோரும் கௌரவ விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க. தனபாலசிங்கமும் பங்கேற்கவுள்ளனர்.

(உ)



நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த அமெரிக்க தூதரகத்தின் அரசியல் அதிகாரியான கொடி சி. டெய்லர் அம்மையார் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவின் இணைப்பாளரைச் சந்தித்தபோது எடுக்கப்பட்ட படம்.




யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் கூட்டம் நேற்று மு.ப. 11.00 மணிக்கு யாழ். செயலகத்தில் யாழ். மாவட்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தலைமையில் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்டவர்களைப் படத்தில்

## ரூர் டி பிரான்ஸ்

# 11 ஆவது சுற்றுப்போட்டியில் டேவிற் மொன்கூற்றி வெற்றி

தற்பொழுது நடைபெற்றுவரும் ரூர் டி பிரான்ஸ் சைக்கிள் ஓட்டப்போட்டியின் 11வது சுற்றில் பிரெஞ்சு வீரர் டேவிட் மொன்கூற்றி வெற்றிபெற்றார்.



செயின்ற் புளோருக்கும் ஃபிகியக் நகருககுமிடையிலான 164கிலோ மீற்றர் தூரத்தைக் கூற்று தனது வாழ்நாளின் முதலாவது ரூர் டி பிரான்ஸ் போட்டியின் சுற்று ஒன்றில் அவர் வெற்றிபெற்றார். போட்டி நடைபெற்ற ஃபிகியக் நகர் அவரது சொந்த ஊராகும்.


பல்லாயிரக்கணக்கான அவரது ஊரவர்களின் கரகோஷத்திற்கு மத்தியில் அவர் இவ்வெற்றியைப் பெற்றார். மத்திய பிரான்ஸ் பிரதேசத்தில் இடம்பெற்ற இந்தச் சுற்றின் ஆரம்பத்தில் இரண்டு ஸ்பெயின் வீரர்களுடன் முன்னணி வகித்துச்சென்ற டேவிட், எட்டுக்கிலோமீற்றர்கள் மீதமிகுந்த நிலையில் அவர் அவ்விருவரையும் பின்தள்ளி முன்னணிக்கு வந்தார். 5நிமிடங்கள் 59விநாடிகள் வித்தியாசத்தில் இரண்டாமிடத்தில் நோர்வேயின் தோர் ஹஷோவ்ட் வந்தார். லான்ஸ் ஆம்ஸ்ரோல் தனது சராசரியைத்தக்க வைத்தார்.

(யே)

## ஆசியக்கிண்ணம் 2004

# ஹொங் கொங் எதிர் பங்களாதேஷ் இந்தியா எதிர் ஐ.அரபு இராட்சியம்

நேற்று இலங்கையில் ஆரம்பமான ஆறு நாடுகள் பங்குபற்றும் ஆசியக் கிண்ணக் கிரிக்கெற் போட்டிகளில் முதல் போட்டியில் ஹொங்கொங் அணியை பங்களாதேஷ் அணியும் இந்திய அணியை ஐக்கிய அரபு எமிரேட்சும் எதிர்த்து மோதின.




எஸ்.எஸ்.ஸி மைதானத்தில் இடம்பெற்ற ஹொங்கொங் பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான பேர்ட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 50ஓவர்களில் 221ஓட்டங்களுக்கு ஒன்பது விக்கெற்றுக்களை இழந்தது. ஜாவிட ஓமார் நான்கு பவுண்டரிகள் அடங்கலாக 68ஓட்டங்களுக்கு ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஹொங்கொங் அணி இச் செய்தி அசசுக்கும் போகும்பொழுது மூன்று விக்கெற் இழப்பிற்கு 44ஓட்டங்களை எடுத்திருந்தது. டபாரக்கும் லம்சம்மும் களத்தில் ஆடிக்கொண்டிருந்தனர்.

தம்புல்லையில் இடம்பெற்ற இன்னுமொரு போட்டியில் ஐக்கிய அரபு ஏமிரேட்சுக்கு எதிராக முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, இச்செய்தி அச்சுக்குப்

# எதென்ஸ்சுக்கு வருகிறார் மேரியன் ஜோன்ஸ்

ஒரு பிள்ளையின் தாயும், மூன்று ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப் பதக்கங்களைக் குவித்தவரும் இம்முறை 100மீற்றர் போட்டியில் போட்டியிடும் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டவருமான 28வயது மேரியன் ஜோன்ஸ் எதென்ஸ் போட்டிகளில் பங்கெடுக்கவருகிறார்.



நேற்று முன்தினம் நடைபெற்ற அமெரிக்க ஒலிம்பிக் தெரிவுப் போட்டிகளில் பெண்களுக்கான நீளம்பாய்தல் போட்டிகளில் 7.11மீற்றர் தூரத்தைக கடந்து அவர் முதலிடம் பெற்றார். ஜமீக்காவின் எல்லாவுக்கு அடுத்தபடியாக இவ் வருடத்தில் கடக்கப்பட்ட இரண்டாவது அதிகூடிய தூரம் இதுவாகும்.

இவ்வெற்றி அவரை ஆசுவாசப்படுத்துவதைவிட அவர் ஒலிம்பிக்கில் தங்கம் வெல்வதற்கான சாத்தியக் கூறுகளை அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகிறது. அதேநேரம் 200மீற்றரின் நடப்பு ஒலிம்பிக் சம்பியனாகவும் விளங்கும் அவர், அந்தத் தெரிவுப் போட்டியில் நேற்றுமாலை பங்குபற்றவிருந்தார்.

(யே)

# ஆர்ஜென்ரீனா றலியில் பீற்றர் சொல்பேக் முதலிடம்


தற்பொழுது ஆர்ஜென்ரீனாவில் நடைபெற்றுவரும் ஆர்ஜென்ரீனா றலி எனப்படும் நகரங்களுக்கிடையிலான மோட்டார் வாகனப் போட்டியில் (**Cross country motor Race**) "சுபாறா" (**Subaru**) சாரதியான பீற்றர் சொல்பேக் இரண்டாவது சுற்றில் வெற்றிபெற்றார்.



ஃபோர்ட் (**FORD**) வாகனச் சாரதி மார்க்கோ மாட்டீன் இரணடாம் இடத்தையும் பேர்ஜோ (**Peugeot**) சாரதி மார்க்கஸ் குரோன் ஹோம் மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

வில்லா கார்லோஸ் பாரிஸில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் வாண வேடிக்கைகள் இடம்பெற்றன எநத ஒரு விபத்தும் நடைபெறாத இப போட்டி, 10சுற்றுக்களைக் கொண்டது. கடந்தமுறையும் இப் போட்டித் தொடரின் சம்பியனாக பீற்றர் சொல்பேக்கே முதலிடம் பெற்றார். (யே)


# விளையாட்டுச் செய்திகள்




ஒலிம்பிக்கிற்கு இன்னும் 28 தினங்கள்

மிழந்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஹொங்கொங் அணி இச் செய்தி அச்சுக்கும் போதும்பொழுது மூன்று விக்கெற் இழப்பிற்கு 44ஓட்டங்களை எடுத்திருந்தது. டபாரக்கும் லம்சம்மும் களத்தில் ஆடிக்கொண்டிருந்தனர்.



தம்புல்லையில் இடம்பெற்ற இன்னுமொரு போட்டியில் ஐக்கிய அரபு ஏமிரேட்சுக்கு எதிராக முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை இரண்டு விக்கெற் இழப்புக்கு 54ஓட்டங்களை எடுத்திருந்தது.

வீரேந்திர ஷேவாக் ஓட்டம் எதுவும் பெறாமலும் சச்சின் ரெண்டுல்கர் 18ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். கங்குலி 20ஓட்டங்களுடனும் லக்ஸ்மன் 10ஓட்டங்களுடனும் களத்திலிருந்தனர். (யே)


## மக்லரன் வடிவமைப்பாளர் ஏட்ரியன் விலகுவாரா?

உலகப் புகழ்மிக்க போர்மியுலா ஒன்று, கார் வடிவமைப்பாளரும் மக்லரன் கார்களைச் சிறப்புற வடிவமைத்தவருமான ஏட்ரியன் நியூவி அவ்வணியைவிட்டு விலகிப் படகுகளை வடிவமைக்கும் பணிக்குச் செல்லப்போவதாக அறிவிக்கப்படுகிறது.



வில்லியம்ஸ் கார் நிறுவனத்தைவிட்டு விலகி 1997ல் மக்லரன் நிறுவனத் தில் இணைந்த நியூவி கடந்த 10வருடங்களாக உலகின் சிறந்த விளையாட்டுக்கார்களை உரு வாக்கிவந்தார். 2000ஆம ஆண் டில் இத்தாலியின் பெராரி கார்கள் போர் மியூலா ஒன்று போட்டிகளை ஆக்கிரமிக்கத் தொடங்கியதுடன் நியூவியின் சகாப்தம் முடிந்ததாகப் பேசப்பட்டது.

ஆனால் அவரால் புதிதாக வடிவமைக்கப்பட்ட மக்லரன் கார் பிரிட்டிஷ் முன்னணிச் சாரதிகளுள் ஒருவரான ரய்க்கொனன் மூலம் பெராரியின் சாவால் மூலம் அவரைப்பற்றிய பேச்சு மீண்டும் சபையேறியது. இந்நிலையில் அவர் மக்லரனை விட்டுச்செல்வது அந்நிறுவனத்திற்கு பாரிய இழப்பாகும். ஆயினும் அவர் இன்னும் தனது இறுதிமுடிவை எடுக்கவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது. (யே)





ஒலிம்பிக்கிற்கு இன்னும் 28 தினங்கள்

## எதென்சுக்கு வாருங்கள் பகுதி III

# எதென்ஸ் ஒலிம்பிக் மைதானங்கள்

# அகியோஸ் கொஸ்மாஸ் ஸ்ரேடியம்

எதென்ஸ் நகரிலிருந்து தெற்குப்புறமாக இருக்கும் அற்றிக்கா நகரின் ஹெலிதிக்கோ கிராமத்தில் புதிதாக அமைக்கபட்டிருக்கும் அகியோஸ் கொஸ்மாஸ் ஸ்ரேடியத்திலேயே படகுப்போட்டிகள் நடாத்தப்படும்.



சர்வதேச படகுப்போட்டிச் சம்மேளனத்தின் கருத்துப்படி ஒலிம்பிக் வரலாற்றில் இதுவரை அமைக்கப்பட்ட படகுப்போட்டி ஸ்ரேடியங்களில் மிகச் சிறந்தது அகியோஸ் கொஸ்மாஸ் ஸ்ரேடியமே என்று அறிவித்துள்ளது.

ஒலிம்பிக் கிராமத்திலிருந்த 34கிலோமீற்றர் தூரத்திலும் எதென்ஸ் நகரிலிருந்து 14கிலோமீற்றர் தூரத்திலும் இந்த ஸ்ரேடியம் அமைக்கப்பட்டுள்ளது. சரோனிக் குடாக்கடலை உள்ளடக்கிய பகுதியிலேயே போட்டிகள் நடாத்தப்படும்.

விளையாட்டு வீரர்களுக்கான உணவு விடுதி மற்றும் மருத்துவ நிலையம் ஆகியவற்றை உள்ளடக்கிய இந்த ஸ்ரேடியத்தில் ஒகஸ்ட் 14-26,28 ஆகிய தினங்களில் போட்டிகள் நடைபெறும் 18-23வரை பரா ஒலிம்பிக் படகுப்போட்டிகளும் நடைபெறும் 400 போட்டியாளர் கலந்துகொள்வர்.

(யே)

# இன்று ஒரு தகவல்

## தாயின் கண்ணீர்

ஒரு வயதான தாய் ஒருநாள் எனக்குத் தொலைபேசி எடுத்தார். ஐயா நான் "இன்று ஒரு தகவல்" கேட்கிறேன். "உங்களிடம் ஒரு கேள்வி கேட்க வேண்டும்" என்றார்கள். "என்ன?" என்று கேட்டேன். 'எனக்குச் சொந்தமாக ஒரு நல்ல வீடிருக்கிறது. வேண்டுமான அளவுக்கு பணமுமிருக்கிறது. கணவரும் மிகவும் நல்லவர். ஓய்வாகி வீட்டில் தான் இருக்கிறார். பிள்ளைகள் யாவரும் நல்ல உத்தியோகத்தில் இருக்கின்றனர். பணமும் நிறையக் கொண்டுவந்து கொடுக்கிறார்கள். அப்படி இருந்தும் என் மனத்தில் நிம்மதி இல்லை. வாழ்வில் ஒரு நிறைவு இல்லை என்றார். "ஏன்?" என்று கேட்டேன். "அதைத்தான் நான் உங்களிடம் கேட்கிறேன். ஏன் அப்படி?" என்றார்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. சிறிதுநேரம் குழம்பிப் போய்விட்டேன். இருந்தாலும் அதை அவரிடம் காட்டிக் கொள்ளாமல் கொஞ்சம் சாமர்த்தியமாக "ஏனம்மா? உங்கள் மனதில் நீங்கள் ஏதோ ஒன்றை எதிர்பார்க்கிறீர்கள். அது நிறைவேறவில்லை. அப்படித்தானே!" என்றேன். "ஆம்" என்றார். அதன்பின் அவரிடம் கொஞ்சம் மனம்விட்டுப் பேசும் போது தானாக விஷயம் வெளியே வந்தது.

அதாவது அவரது பிள்ளைகள் பெரிய பெரிய உத்தியோகத்தில் இருப்பதனால் அவசரமாக வந்துவிட்டு ஓடுகிறார்களாம். ஆசையாக அம்மா என்றழைத்து ஆற அமரக் கொஞ்சநேரமாவது என்னிடம் கதைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்? என்றார். இப்படி ஒரு ஏக்கம் அந்தத் தாயின் மனதில்.

இப்படி மகனது அன்புக்காக மட்டுமே ஏங்கும் தாய்மார்கள் பலபேர் உள்ளனர். இந்த உலகில்! இதை நினைக்கும் போது ஒரு வெளிநாட்டு நாடோடிக் கதை நினைவுக்கு வருகிறது. அதாவது கடவுள் படைப்புத் தொழிலில் மிகவும் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தாராம்.

மீன்களைப் படைத்தார். பறவைகளைப் படைத்தார். விலங்குகளைப் படைத்தார். அவருக்குத் திருப்தி ஏற்படவில்லை. அதன் பின் மனிதர்களைப் படைத்தார். அப்போதும் அவருக்கு மனநிறைவு ஏற்படவில்லை. கடைசியாகத் தனது சக்தி முழுவதையும் பயன்படுத்திக் குறையே இல்லாத ஒரு படைப்பை உருவாக்கினார். உன்னதமான ஒரு படைப்பு. அதுதான் பெண். அதாவது தாய்.

இப்படி உருவாக்கி எல்லோரையும் இந்த உலகத்தில் விட்டுவிட்டார். அதன்பின் சில காலம் கழித்து தனது தேவியை அழைத்துக் கொண்டு இந்தப் பூலோகத்திற்கு வந்தார். தனது குறையில்லாத படைப்பாகிய பெண்ணைப் பார்த்தார். "ஏனம்மா உனக்கு இன்னும் ஏதாவது குறை இருந்தால் சொல் .அதையும் நிவர்த்தி செய்து விடுகிறேன்" என்றார்.

அந்த அம்மா பார்த்தார், "சுவாமி! எனக்கு நீங்கள் கொடுத்திருக்கும் இரண்டு கை எனது பிள்ளைகளுக்குச் சேவை செய்யப் பத்தவில்லை. அதனால் இன்னும் இரண்டு கைகொடுத்தால் நல்லது" என்றார். கடவுள் பார்த்தார். "அதனால் என்ன? அப்படியே செய்து விடலாம். இதோ அதற்கான வரம் கொடுத்துவிட்டேன்" என்றார். இப்போது அந்த அம்மாவுக்கு 4 கைகள் ஆகிவிட்டது. 4 கைகளாலும் பிள்ளைகளுக்குச் சேவை செய்ய ஆரம்பித்துவிட்டார்.

கடவுள் திருப்தியாகத் திரும்பிச் சென்றார். அதன்பின் சிலகாலம் கழித்து மீண்டும் தன் தேவியுடன் திரும்பி வந்தார். பெண்ணைப் பார்த்தார். "இப்போது சந்தோஷம்தானே என்றார். அதற்கு அந்த அம்மா " சந்தோஷம் தான். இருந்தாலும் இப்போது எனக்கு இருக்கும் இரண்டு காலும்

# விடுதிகளில் இட நெருக்கடி ; மருந்துத் தட்டுப்பாடு மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் பாராமுகம்

## காரை. ஆஸ்பத்திரி நிலை குறித்து வைத்திய அதிகாரி கவலை

(காரைநகர்)

தொற்றுக் காய்ச்சலினால் வரும் நோயாளர் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது. ஆனால இங்கு எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லை என்பது குறித்து மாவட்ட சுகாதாரப் பணிப்பாளருக்கு அவசர கடிதம் ஒன்றினை அனுப்பியும் எந்தவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்பட்வில்லை. காரைநகர் வைத்தியசாலை வைத்திய அதிகாரி திருமதி எஸ்.கனகசபை இவ்வாறு கவலை தெரிவித்தார்.

தற்போது காரைநகரில் பரவும் நெருப்புக்காய்ச்சல் தொடர்பாக வைத்திய அதிகாரியிடம் வினவிய போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

இம்மாதம் 13ஆம் திகதி வரை 196பேர் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவர்களில் 46பேருககு நெருபபுக்காய்ச்சல் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 12பேர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அமபுலன்ஸ் வண்டி மூலம் அனுப்பப்பட்டுள்ளனர்.

இவ்வைத்தியசாலையில் குறிப்பிட்டளவு மருந்துகளே கையிருப்பில் உள்ளன. அது குறிப்பிட்ட காலத்திறகே போதுமானதாக உள்ளது. அத்துடன் ,இங்கு மருததுவ ஆய்வுகூட உத்தியோகத்தர்களோ அல்லது உபகரணங்களோ எதுவும் இல்லை.

இதனால் இங்குவரும் நோயாளாகளின் இரத்தப் பரிசோதனை கூட மூளாய, சங்கானை, ஊர்காவற்றுறை போன்ற அரசினர் வைத்தியசாலைகள் மற்றும் தனியார் வைத்தியசாலைகளிலேயே மேற்கொள்ளப்பட்டு உறுதிப்படுத்தப்படுகிறது. இதானல் நோயாளர்களும் பெரும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.

இங்கு விடுதிகளில் 24பேர் மட்டுமே ஒருநேரத்தில் தங்க வைத்து சிகிச்சை மேற்கொள்ளமுடியும். ஆனால், இன்று 44 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளதனால் நோயாளர்களை வெளி விறாந்தைகளிலேயே படுக்க வைக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை உருவாகியுள்ளது.

இதனால் நோயாளர்கள் தங்கி நின்று சிகிச்சை பெற மறுத்து வருகின்றதனால் இந்நோய் மேலும் பரவக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

அத்துடன்.வைத்தியசாலை உத்தியோகத்தர்களிற்கு தற்போது மேலதிகமான வேலைப்பளு இருப்பதால் ஊழியர்கள் எவரும் தமது சொந்த விடுப்பைப் பெறமுடியாத நிலைமை தோன்றியுள்ளது என்று கூறினார். (உ-246)

## கப்பல் போக்குவரத்து மாநாடு முதல் தடவையாக இலங்கையில்

(கொழும்பு)

சர்வதேச துறைமுக மற்றும் கப்பல் போக்குவரத்து தொடர்பான மாநாடு ஒன்று இம்முறை முதல் தடயைாக இலங்கையில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 19ஆம் திகதி முதல 23ஆம் திகதிவரை கொழும்பில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டினை சர்வதேச கடற்பாதுகாபபுச் சம்மேளனம், இலங்கைததுறைமுக அதிகார சபை, இலங்கை கடற்படை ஆகியன இணைந்து ஒழுங்கு செய்துள்ளன.

இதேவேளை, சர்வதேச கடற்பாதுகாப்பு சம்மேளனத்தின் அறிவுரையின்படி கடந்த யூலை முதலாம்திகதி முதல்உலக நாடுகளின் துறைமுகங்கள் யாவும் கடற்படையினரின் முழுமையான பாதுகாப்பிற்குள் வந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-10)

## பிரதமர் ம கிந்த இன்று இந்தியாவுக்குப் பயணம்

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இன்று இந்தியா பயணமாகவுள்ளார்.

அங்கு இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்,இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம்உட்பட பல முக்கிய அரசியற் பிரமுகர்களைச சந்திக்கவுள்ளதாக பிரதமரின் பேச்சாளர் வெலிவித்த தெரிவித்துள்ளார்.

இந்தியா செல்லும் பிரதமருடன் வர்த்தக வாணிப அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே,விவசாயக் காணி அமைச்சர் அநுரா திஸ்ஸநாயக்க ஆகியோரும் செல்லவுள்ளனர்.

நின்று போயுள்ள சமாதானப பேச்சு, புனருத்தாரணப் பணிகள், பொருளாதார உதவிகள் உட்பட இரு நாடுகளுக்குமிடையிலான புரிந்துணர்வை வளர்ப்பது குறித்தும் இப்பேச்சுக்கள் அமையும் எனத் தெரியவருகிறது,

இதேவேளை.சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதில் தற்போது ஏற்பட்டுள்ள நெருடல்கள் குறித்து இந்தியப் பிரதமருடன் மகிந்த ராஜபக்ஷ பேச்சுவார்த்தை நடத்தினாலும்,அது குறித்து இந்தியாவின் நிலைப்பாட்டை அறிந்து ஜனாதிபதியிடம் கூறுவதுமட்டுமே மகிந்தவின் பணியாக இருக்குமென்றும் அவர் சமாதானப் பேச்சுவார்த்தை குறித்த விடயங்களில் தலையிட வாய்ப்பில்லை என்றும் அவரது பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-121)

# இராசி பலன்

**17.07.2004**

**(ஆடி 02, சனிக்கிழமை)**

**அமாவாசை பிற்பகல் 05.19 மணி வரை**

**புனர்பூசம் மு.இ 09.51 மணி வரை**

**இராகுகாலம் 09.00-10.30 மணி வரை**

**சுபநேரம் 03.00-04.30 மணி வரை**

**அமாவாசை விரதம்**

### மேடம்

**மாதா சுகம், புத்தி சஞ்சலம், காரிய தாமதம்,தனவிரயம்.**

### இடபம்

**மாதர் நட்பு, நற்கீர்த்தி, முயற்சி கைகூடும், போசன நன்மை.**

## சர்வதேச பௌத்த மாநாட்டில் இலங்கைப் பிக்குகள் பங்கேற்பு

(கொழும்பு)

தாய்லாந்தின் தலைநகரான பாங்கொங்கில் நேற்று ஆரம்பமான சர்வதேச பௌத்த மாநாட்டில் இலங்கையின் சார்பில் உடுகம புத்தரகித்த மகாநாயக்கர் தலைமையிலான தூதுக்குழுவினர் கலந்து கொள்கின்றனர்.

சனாவில் நடைபெறும் உலக பௌத்த பேரவையின் மாநாட்டுடன் இணைந்ததாக தாய்லாந்து அரசாங்கமே இந்த 5நாள் நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.

உலகின் பௌத்த தலைவர்கள் மத்தியில் ஐக்கியத்தை வளர்ப்பது பற்றி இந்த மாநாட்டில் முக்கியமாக ஆராயப்படவுள்ளது. (உ-60,10)

## துவிச்சக்கர வண்டிகளில் இலக்கத் தகட்டுப் பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

என்றார். இப்போது அந்த அம்மாவுக்கு 4 கைகள் ஆகிவிட்டது. 4 கைகளாலும் பிள்ளைகளுக்குச் சேவை செய்ய ஆரம்பித்துவிட்டார்.

கடவுள் திருப்தியாகத் திரும்பிச் சென்றார். அதன்பின் சிலகாலம் கழித்து மீண்டும் தன் தேவியுடன் திரும்பி வந்தார். பெண்ணைப் பார்த்தார். "இப்போது சந்தோஷம்தானே என்றார். அதற்கு அந்த அம்மா " சந்தோஷம் தான். இருந்தாலும் இப்போது எனக்கு இருக்கும் இரண்டு காலும் போதாது. இன்னும் இரண்டு கால் இருந்தால் நல்லது. நிறைய ஓடியாடி பிள்ளைகளுக்காக வேலை செய்யலாம்" என்றார். சரி என்று சொல்லி 4 கால்கள் இருப்பது போல் செய்துவிட்டு திருப்தியாகத் திரும்பிச் சென்றார்.

மறுபடியும் சில நாட்களின் பின் தேவி கடவுளிடம் சொன்னார், "நீங்கள் என்னதான் முயற்சி செய்தாலும் முழுமையான ஒரு படைப்பை உருவாக்க முடியாது என்றே நான் நினைக்கிறேன்" என்றார். "அப்படியா சொல்கிறாய் வா பார்த்து விட்டுவரலாம்" என்று புறப்பட்டு வந்தார்கள்.

இங்கே வந்து பார்த்தால் 4 கால், 4 கையுடைய அந்தப் பெண் ஒரு சுவரில் சாய்ந்து உட்கார்ந்து அழுது கொண்டிருந்தார். இப்போது தேவி அந்தப் பெண்ணைச் சுட்டிக்காட்டிக் கடவுளிடம் கேட்டார், " நீங்கள் அந்தப் பெண்ணுக்கு கையையும், காலையும் கொடுத்தீர்கள் சரி.. கண்ணீரை ஏன் கொடுத்தீர்கள்?" என்று கேட்டார். அதற்குக் கடவுள் சொன்னார், "கையைக் கொடுத்தது நான் தான். காலைக் கொடுத்தது நான் தான். ஆனால் அந்தக் கண்ணீரைக் கொடுத்தது நானல்ல! அதைக் கொடுத்தது அவரது பிள்ளைகள்" என்றாராம்.

இன்றும் அப்படித்தான் பல பிள்ளைகள் தம் தாய்க்குக் கண்ணீரைத் தான் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். அம்மாவை மதிக்கும் பிள்ளைகள் தான் இன்று நன்றாக இருக்கிறார்கள். அதை நினைவில் வையுங்கள்.

இந்தக் காலத்துப் பிள்ளையாண்டான் ஒருவன் அவனது தாயிடமும் நல்ல பிள்ளையாக நடந்து கொள்வான். மனைவியிடமும் நல்ல கணவனாக நடந்து கொளவான். மிகவும் சாமர்த்தியம். ஒருநாள் அவனிடம் கேட்டேன். "ஏனப்பா உன் அம்மாவும் மனைவியும் சண்டை பிடித்தால் நீ எந்தப் பக்கம்?" என்றேன். "வீட்டுக்கு வெளிப்பக்கம்" என்றான்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

சுபநேரம் 03.00-04.30 மணி வரை

அமாவாசை விரதம்

**மேடம்**

மாதா சுகம், புத்தி சஞ்சலம், காரிய தாமதம், தனவிரயம்.

**இடபம்**

மாதர் நட்பு, நற்கீர்த்தி, முயற்சி கைகூடும், போசன நன்மை.

**மிதுனம்**

காரிய தாமதம், அதிக செலவு, போசன சுகக் குறைவு, கௌரவக் குறைவு.

**கடகம்**

வெகுமானம், மனமகிழ்ச்சி, முயற்சி கைகூடும், குடும்ப சுகம்.

**சிங்கம்**

சோம்பல் நிலை, சிந்தனை மிகுதி, தனவிரயம், காரிய அலைச்சல்.

**கன்னி**

தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, குடும்ப மகிழ்ச்சி, போசன சுகம்.

**துலாம்**

அதிகாரம், ஆரோக்கியம், காரிய சித்தி, தனவரவு.

**விருச்சிகம்**

புதிய திட்டமிடல், பிரயாணம், சரீரப் பிரயாசை, எதிர்பாராத செலவு.

**தனுசு**

காரிய தடங்கல், வீண் பிரச்சினை, பொருள் விரயம், அஜீரணக் கோளாறு.

**மகரம்**

செல்வாக்கு, முயற்சி கைகூடும், போசன சுகம், பிரயாண நன்மை.

**கும்பம்**

தொழில் சிந்தை, சத்துரு ஜெயம், ஜனவசியம், முயற்சி கைகூடும்.

**மீனம்**

பணத்தட்டுப்பாடு, மனக்கவலை, உடல்நலக் குறைவு, காரிய தாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்**

நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.

உலகின் பௌத்த தலைவர்கள் மத்தியில் ஐக்கியத்தை வளர்ப்பது பற்றி இந்த மாநாட்டில் முக்கியமாக ஆராயப்படவுள்ளது. (உ-60,10)

## துவிச்சக்கர வண்டிகளில் இலக்கத் தகட்டுப் பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

இலக்கத் தகடற்ற துவிச்சக்கர வண்டிகளைப் பரிசோதித்து அவற்றுக்கு இலக்கத் தகடுகளை வழங்கும் பணியில் நேற்று முன்தினம் பொலிஸாரும யாழ்.மாநகரசபையினரும் இணைந்து ஈடுபட்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது.

முத்திரைச் சந்திப் பகுதியில் நின்றிருந்த பொலிஸாரும் மாநகரசபையினரும் அதனூடாக துவிச்சக்கர வண்டியில் பயணித்தவர்களைத் தடுத்து நிறுத்தி இலக்கத தகட்டுப் பரிசோதனையை மேறகொண்டனர்.

அத்துடன், இலக்கத் தகடில்லாத துவிச்சக்கர வண்டிகளுக்கு புதிய இலக்கத் தகடுகளையும் வழங்கினர்.

இதேவேளை, இலக்கத் தகடுகள் இன்றி துவிச்சக்கர வண்டிகளைப் பாவித்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். போக்குவரத்துக் கண்காணிப்புப் பொலிஸார் எச்சரித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (உ-19)

## வட்டி வீதங்களில் எந்த மாற்றமும் இல்லை

### மத்திய வங்கி அறிவிப்பு

பொருளாதாரத்தின் சிறப்பான வளர்ச்சி கருதி வட்டி வீதங்கள் மாற்றப்படாது என மத்திய வங்கி தெரிவித்துள்ளது. பொருளாதாரத்தின் சிறந்த வளர்ச்சி கருதி நிதியியல் சபை இவ்வாறு முடிவு செய்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதன் பிரகாரம் மீள் கொள்வனவு வீதங்கள் தொடர்ந் தும 7 சதவீதமாகப் பேணப்படும். மீள் விற்பனை வீதம் 8.5 சதவீதமாகக் காணப்படும்.

இந்த ஆண்டின் முதல் 3 மாதங்களில் பொருளாதாரம் 6.2 சதவீத வளர்ச்சியைக் காட்டியிருக்கின்றது. போர் நிறுத்த உடன்படிக்கை தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட்டமை, உலக பொருளாதாரம் சீரான நிலை எட்டியமை உட்பட பல விடயங்கள் இதற்கு காரணமாக அமைந்திருக்கின்றன என்று மத்திய வங்கி மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (உ-8)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# அடுத்தடுத்து நடக்கும் பெண்கள் படுகொலை

## சென்னையில் 20 நாட்களில் 3 கொலைகள்

(சென்னை)

சென்னை மாநகரத்தில் கடந்த சில வாரங்களாக வீட்டில் தனியே இருக்கும் பெண்கள் கொள்ளையர்களால் அடுத்தடுத்துக் கொலை செய்யப்பட்டுவரும் சம்பவங்களால் பீதி ஏற்பட்டுள்ளது.

இந்தக் கொலைகளைச் செய்த குற்றவாளிகள் இன்னமும் கைது செய்யப்படவில்லை.

இந் நிலையில் கொள்ளையடிக்க வருபவர்களைப் பொது மக்கள் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லலாம் என்று மாநகர காவல்துறை ஆணையர் நடராஜன் கூறியிருக்கிறார்.

சென்னை ராயப்பேட்டையைச் சேர்ந்த விலோசனபாய் என்ற வயதான பெண்மணி பகல் பொழுதில வீட்டில் தனியாக இருந்த போது கடந்த மாதம் 17 ஆம் திகதி அவரைக் கொலை செய்து 20 சவரன் நகைகளைக் கொள்ளையடித்துச் சென்று விட்டனர்.

இதன் பிறகு கே.கே.நகரில் மத்திய அரசு ஊழியர் குடியிருப்பில் தனியாக இருந்த உமாதேவி என்ற பெண்மணி நகை மற்றும் பணத்துக்காகப் பட்டப்பகலில் மர்ம மனிதர்கள் தாக்கியதில் உயிரிழந்தார்.


இதனால் எழுந்த பரபரப்பு ஓய்வதற்குள்ளேயே அண்ணா நகரில் அடக்குமாடிக் குடியிருப்பில் வசித்து வந்த அனிதா என்ற 27 வயதுப் பெண் நகைக்காக இரு தினங்களுக்கு முன் உயிரைப் பறிகொடுத்துள்ளார்.

இப் படுகொலைகள் குறித்து சென்னை மாநகர காவல்துறை ஆணையரைக் கேட்டபோது கொள்ளையடிக்க வருபவர்களைத் துப்பாக்யால் சுட்டுத்தள்ளுமாறு பொது மக்களுக்கு அறிவுரை வழங்கினார்.

சென்னை மாநகரில் 20 தினங்களுக்குள் அடுத்தடுத்து நடைபெற்ற இக்கொலைச் சம்பவங்கள் ஒன்றில் கூடக் குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை.

படுகொலைக்கு ஆளான 3 பெண்களுமே வீட்டில் பகல் பொழுதில் தனியாக இருந்த போது கொள்ளையர்களால் தாக்கப்பட்டவர்கள்.

இந் நிலையில் கொள்ளையர்கள் வந்தால் சுட்டுக் கொல்லுமாறு காவல்துறை ஆணையர் வழங்கியுள்ள அறிவுரையை வீட்டில் தனியாக இருக்கும் பெண்களால் செயல்படுத்த இயலுமா? அவர்கள் எல்லோருக்கும் பொலிஸாரால் துப்பாக்கி தான் வழங்க முடியுமா? இந்தச் சந்தேகங்களுக்கு காவல்துறை ஆணையர்தான் விடை தர வேண்டும் என்கிறார்கள் பொது மக்கள். (து)




# குருவாரூர் யானைக்கு வாழைப்பழம்

## ஜெயலலிதா பற்றி கருணாநிதி கிண்டல்

(சென்னை)

சென்னையில் வீடுகளில் தனியாக இருக்கும் பெண்கள் கொலை செய்யப்படும் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்வது குறித்து அ.தி.மு.க. அரசு கவலைப்பட்டதாகத் தெரியவில்லையென்று தி.மு.க.தலைவர் கருணாநிதி குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாகச் செய்தியாளர்கள் கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளித்த அவர், குருவாரூர் யானைக்கு வாழைப்பழம் கொடுக்கத் தனிவிமானத்திலும் ஹெலிகொப்டரிலும் போக வேண்டியதை விட இதெல்லாம் அரசுக்குப் பெரிய பிரச்சினை அல்ல என்று கூறியுள்ளார்.

முன்பு, காவிரிநீர்ப்பிரச்சினைக்க்ாகக் கர்நாடக அரசைக் கலைக்கும் தீர்மானத்தைத் தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றுவோம் என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கூறியதும், நதி நீர் ஒப்பந்தத்தை இப்போது பஞ்சாப் சட்டமன்றம் ரத்து செய்த தீர்மானமும் நாட்டின் ஒருமைப்பாட்டைச் சீர்குலைக்கும் செயல்கள் என்று வேறொரு கேள்விக்கு அளித்த பதிலில் அவர் கூறியிருக்கிறார்.

எனினும் அகில இந்திய காங்கிரஸ் தலைவரும், பிரதமரும் நதிநீர்ப் பிரச்சினையில் உடனடியாகத் தலையிட்டு தீர்வுகாண முன் வந்திருப்பது ஆறுதல் தரக்கூடிய செய்தியாகும் என்று கருணாநிதி தெரிவித்துள்ளார்.



மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரி மாணவர் சேர்க்கையில் இந்த ஆண்டைப் போல முந்திய எந்த ஆண்டிலும் இவ்வளவு குழப்பங்கள்கிடையாது என்று மற்றொரு கேள்விக்கு அளித்த பதிலில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் தமிழகத்தில் இலட்சக்கணக்கான மாணவர்களும் அவர்களின் பெற்றோரும் மன உளைச்சலில் தவித்துக் கொண்டிருப்பதாகவும் கருணாநிதி தெரிவித்துள்ளார். (து)

# தமிழக முதல்வர் அளித்த திடீர் பேட்டி

(சென்னை)

அரசுப் பணியிடங்களுக்குப் புதிய ஊழியர்கள் நியமிக்கப்படமாட்டார்கள் என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.



சென்னையில அ.தி.மு.க. தலைமை நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனைத் தெரிவித்த அவர், தமிழ் நாட்டில் அளவுக்கதிகமான எண்ணிக்கையில் அரசு ஊழியர்கள் இருப்பதாகத் தெரிவித்தார்.

தமிழ் நாட்டில் எப்போதுமில்லாத அளவுக்கு இந்த ஆண்டு பாடநூல்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது பற்றிய கேள்விக்கு, இதற்கு தமிழ் நாடு அரசின் பாடநூல் கழக இயக்குநர்தான் காரணம் என்று அவர் பதிலளித்தார்.

சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்டுவதற்கு எதிரான வழக்குப்பற்றிக் கேட்டதற்கு, இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதால் இது குறித்துப் பதில் சொல்ல இயலாது என்று அவர் கூறினார்.

கோவில் குடமுழுக்குகள் ஒத்திவைக்கப்பட்டது பற்றிய கேள்விக்கு அது முடிந்துபோன பிரச்சினை என்று கூறிய அவர், அந்த கோவில்களுக்கு வேறு திகதிகள் குறிக்கப்பட்டு விட்டதாகக் கூறினார்.

பா.ஜ.க.கட்சியுடன் அ.தி.மு.க. கூட்டணி தொடருவதாகவும் அவர் தெரிவித்தார். (து)

# இந்தியச் செய்திகள்

## நாடாளுமன்றத்தில் பா.ஜ.க. அமளி

குஜராத் மாநிலம் ‘கோத்ரா’ ரயில் எரிப்புச் சம்பவம் தொடர்பாக ரயில்வே அமைச்சர் லாலு பிரசாத் யாதவ் இலாகா பூர்வ விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதற்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்க்கட்சி உறுப்பினர்களின் தொடர் அமளியினால் நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவைக் கூட்டம் தொடங்கியவுடனேயே இப் பிரச்சினையை

நாயகக் கூட்டணிக் கட்சி உறுப்பினர்கள் இதே பிரச்சினைக்காக இதேபோன்று தொடர் ரகளையில் ஈடுபட்டதால் மாநிலங்களவை மறுநாள்வரை ஒத்திவைக்கப்பட்டது. (து)



## ஆந்திர மாநிலத்தில் சுற்றுப்பயணம்

# நதி நீர் ஒப்பந்தத்தை முறிக்க பஞ்சாப் சட்டமன்றில் தீர்மானம்

தலைமை நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனைத் தெரிவித்த அவர், தமிழ் நாட்டில் அளவுக்கதிகமான எண்ணிக்கையில் அரசு ஊழியர்கள் குறிக்கப்பட்டு விட்டதாகக் கூறினார்.

பா.ஜ.க.கட்சியுடன் அ.தி.மு.க. கூட்டணி தொடருவதாகவும் அவர் தெரிவித்தார். (து)

பிரசாத் யாதவ் இலாகா பூர்வ விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதற்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்க்கட்சி உறுப்பினர்களின் தொடர் அமளியினால் நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவைக் கூட்டம் தொடங்கியவுடனேயே இப் பிரச்சினையை எழுப்பிய பா.ஜ.க.உள்ளிட்ட தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சியினர் அவையின் மையப் பகுதிக்கு வ்ந்து அரசுக்கு எதிராகக் கோஷமிட்டனர்.

கேள்வி நேரம் முடிந்தவுடன் இவ் விடயத்தை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளலாமென்று சபாநாயகர் தெிவித்த யோசனையை ஏற்க மறுத்த எதிர்க்கட்சியினர் தொடந்து அமளியில் ஈடுபட்டதால் மக்களவை நடவடிக்கைகளை முதலில் நண்பகல் வரையிலும், பின்னர் பி.ப.2 மணி வரையிலும் பின் நாள் முழுவதற்கும் சபாநாயகர் சோமநாத் சட்டர்ஜி ஒத்திவைத்தார்.

மாநிலங்களவையிலும் பா.ஜ.க. தலைமையிலான ஜன ... ஈடுபட்டதால் மாநிலங்களவை மறுநாள்வரை ஒத்திவைக்கப்பட்டது. (து)

... அவர்களின் பெற்றோரும் மன உளைச்சலில் தவித்துக் கொண்டிருப்பதாகவும் கருணாநிதி தெரிவித்துள்ளார். (து)

# நதி நீர் ஒப்பந்தத்தை முறிக்க பஞ்சாப் சட்டமன்றில் தீர்மானம்

அண்டை மாநிலங்களுடனான நதிநீர்ப் பங்கீட்டு ஒப்பந்தத்தை தன்னிச்சையாக முறித்துக் கொள்ள வகை செய்யும் சட்டமொன்று பஞ்சாப் சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தை அணுகுவது என்று மத்திய அரசு தீர்மானித்துள்ளது.

அண்டை மாநிலங்களுடனான நதிநீர்ப் பங்கீட்டு ஒப்பந்தத்தை பஞ்சாப் மாநில அரசு முறித்துக் கொண்ட பிரச்சினையில் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் உடனடியாகத் தலையிட வேண்டுமென்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கேட்டுக் கொண்டிருக்கிறார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மன்மோகன் சிங் அரசு இப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணத் தவறும பட்சத்தில் குடியரசுத் தலைவர் உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனையைக் கோரவேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார்.

மாநிலங்களுக்கிடையேயான நதி நீர்ப்பங்கீட்டு உடன்பாட்டினை பஞ்சார் அரசு ரத்து செய்திருப்பது தவறான அணுகுமுறையென்று தி.மு.க.தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார். (து)



இந்தியா வந்துள்ள ஜேர்மனியின் வெளியுறவுச் செயலர் ஜோர்ஜ் கோபிஷ்ஷர் புதுடில்லியில் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.



ஆந்திர மாநிலத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அப்துல்கலாம் ஹைதராபாத்தில் சொரஜி கோத்ரெஜ் பசுமை மைதானத்தில் மரக்கன்றை நாட்டினார்.

# பொடா சட்ட ரத்து பற்றி ஆலோசனை

(டில்லி)

சர்ச்சைக்குரிய பொடா சட்டத்தைத் திரும்பப் பெறுவது குறித்து உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல் உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

தீவிரவாதத்தை ஒடுக்குவதற்காகக் கொண்டு வரப்பட்ட பொடா சட்டத்தைச் சில மாநில அரசுகள் தவறாகப் பயன்படுத்துவதாகப் புகார் எழுந்தது.

இதைத் தொடர்ந்து பொடா சட்டத்தை ரத்து செய்யவேண்டுமென்றும் பல்வேறு கட்சிகள் மத்திய அரசை வலியுறுத்திவந்தன.

ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் குறைந்த பட்சச் செயல் திட்டத்திலும் பொடாவை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப் படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் டில்லியில் உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல் தமது அமைச்சகத்தின் முக்கிய அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

அப்போது பொடா சட்டத்தை நீக்குவதாலேற்படும் சாதக பாதகங்களை அதிகாரிகள் அமைச்சரிடம் எடுத்துக் கூறினர்.

பொடா சட்டம் ரத்து செய்யப் படும் நிலையில் தற்போதுள்ள சட்டங்களைக் கொண்டே தீவிரவாதத்தை ஒடுக்குவது குறித்தும் இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆலோசிககப்பட்டது.

(து)

# அனைவராலும் பார்க்கப்படவேண்டிய உன்னத படைப்பு 'ஞானசௌந்தரி'

ஈழத்துக் கலை இலக்கிய பாரம்பரியங்களை பாதுகாத்தல் என்றபணியில் ஈடுபடும் அமைப்புக் களில் திருமறைக்கலாமன்றத்திற்கும் ஒரு சிறப்பிடம் உண்டு. 1965 ஆம் ஆண்டளவில் ஆரம்பமான இதன் கலைப்பணி இன்று இலங்கையின் பல பாகங்களிலும், கடல் கடந்தும் செயல் நீட்சி பெற்றுத் தொடர்வது குறிப்பிடத்தக்கது. 'நவீன மயமாதல்' என்ற பெயரில் மேலைத்தேய நாடுகளின் காலணித்துவம் அதிகரித்துவரும் இக்காலங்களில் தமிழர் தம் கலைகளை பேணிப் பாதுகாப்பதில் இத்தகைய நிறுவனங்களின் செயற்பாடுகள் பாராட்டப்படுதற்குரியதே.

## திரைநோக்களம்

இம் மாதம் 9,10,11 ஆம் திகதிகளில் திருமறைக் கலாமன்றத்தினால் ஆற்றுகைப்படுத்தப்பட்ட 'ஞான செளந்தரி' எனும் இசை நாடகம் இதற்கு ஒரு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது. ஈழத்துக் கலைப் பொக்கிஷங்களைப் பாதுகாக்கும் நோக்குடன் இசை நாடகத்திற்கென விழாவும், அதனை அடுத்து இவ் 'ஞான செளந்தரி' இசை நாடகமும் மேடையேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இன்று இசை நாடகங்கள் பணத்துக்காக சில்லாறைத்தனமாக ஆற்றுகைப்படுத்தப்படுகின்றது. அதன் தார்ப்பரியம் அழிக்கப்படுகின்றது என்ற விமர்சனங்களுக்கு மத்தியில் 'இல்லை' அது இன்னமும் உயிர்வாழ்கின்றது. காலங் கடந்தும் உயிர்வாழ்விக்கப்பட வேண்டியது என்ற உணர்வை இவ் வாற்றுகை எடுத்தியம்பியுள்ளது. சிறுவர்கள், இளைஞர்கள், முதியவர்கள் என யாவரும் கண்டு கழிக்கக்கூடிய உன்னதப் படைப்பு இது என்று கூறுவதில் வியப்பில்லை.

இசை நாடகத்துக்கே உரியதான கதை அமைப்புக்கொண்ட ஞானசௌந்தரி திருமறைக் கலாமன்றத்திற்கே உரித்தான வடிவ வெளிப்பாடாக அமைந்திருந்தது இதன் கதை அமைப்பு.

ஞானசௌந்தரி எனும் இறை பக்தியுள்ள பெண் தனது சிற்றன்னையால் கொடுமைப்படுத்தப்பட்டு, இரண்டு கைகள் துண்டிக்கப்பட்ட நிலையில் நடுக்காட்டில் கைவிடப் படுகிறாள். பின்னர் அண்டை நாட்டு இளவரசனால் காப்பாற்றப்பட்டு மண முடிக்கப்படுகிறாள். ஆனால் மீண்டும் அவளது சிற்றன்னையின் சூழ்ச்சியால் கரமிழந்த நிலையுடன், இரு குழந்தைகளுடனும் காட்டிலே தனித்து விடப்படுகிறாள். ஞானசௌந்தரி கைவிடப் பட்டாளா? காப்பாற்றப்பட்டாளா? என்ற எதிர்பார்ப்புக்களுடன் நாடகம் நகர்கின்றது.

இதன் அரங்கவிதான செயற்பாடுகளை நோக்கும் போது மேற் குறிப்பிட்டது போல திருமறைக் கலாமன்றத்திற்கே உரித்தான நடையில் அமைக்கப்பட்டிருந்தது. இந் நாடகத்தின் உயிர் நாடி **(PLUS POINT)** நடிகர் தெரிவாகும். உண்மையில், ஒவ்வொரு நடிகரும் சிறப்பாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். குறிப்பாக 'ஞானி செள்தரி' பாத்திரமேற்ற பெண், ஞானசௌந்தரியின் கணவன், இரு அரசர்கள், சிற்றன்னை, மழுவர்கள், தூதுவன் என அனைவரும் தத்தமது பாத்திரங்களை சிறப்பாக வெளிப்படுத்தியிருந்தனர்.

மெருகூட்டப்படவேண்டிய பகுதிகளாகவும் சிலவற்றைக் குறிப்பிடலாம். ஒலி - ஒளி அமைப்புக்களில் அதீத அக்கறை எடுப்பின் மேலும் இதன் படைப்பாக்கற் பெறுமதியை உயர்த்துவதாய் அமையும். அடுத்து ஞானசௌந்தரியின் சிற்றனை பாத்திரமேற்றவர் ஒரு சில இடங்களில் மட்டும் சுருதி கலைந்தார். இசை நாடகத்தின் உயிர்

**வே.சுமன்ராஜ்**

நாடி இசை என்ற வகையில் மீண்டும் அத்தகைய ஒரு பிறழ்வு ஏற்படாது தவிர்த்தல் என்பது திருமறைக் கலாமன்ற அரங்கவியலாளர்கள் கவனத்திற்குரியதே.

ஆயினும், முழுமையில் ஞானசௌந்தரி ஒரு உன்னதப் படைபபு. நீண்ட நாட்களின் பின்னர் நல்லதொரு நாடகம் பார்த்தோம் என்று சொல்லிவிட்டு வெளியேறிய ரசிகர்களுக்கு மீண்டும் இன்றும் நாளையும் மன்ற ஆரங்கில் ஞானசௌந்தரி மேடையேறவிருப்பது மகிழ்வு தரும் விடயமாகும். "ஞானசௌந்தரி உண்மையில் பார்க்கப்படவேண்டியதே" □

---

# ஹெல உறுமய செயலர் பதவியைத் துறந்தார் திலக்கருணாரட்ன

(கொழும்பு)

ஹெல உறுமயவின் செயலாளர் பதவி உட்பட சகல உத்தியோகபூர்வ கடமைகளிலிருந்தும் தான் விலகுவதாக திலக்கருணாரட்ண அறிவித்துள்ளார்.

ஏனைய பௌத்த குருமார்களுடன் பல விடயங்களில் உடன்பாடு காணமுடியாததினால் தான் இம் முடிவினை மேற்கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார். ...னராக மாத்திரமே இருக்கப் போவதாக அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, ஹெல உறுமயவின் எம்.பிக்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடே இவரது இந்த முடிவிறகுக் காரணம் என அவருக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (த-6)

## இடர் கடன்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டச்சு வீதி ஸ்ரீ பழனி ஆண்டவர் சிக்கனக் கூட்டுறவுச் சங்கம் 2000 ஆம் ஆண்டு இடம் பெயர்வினால் பாதிக்கப்பட்ட 12 சங்க அங்கத்தவர்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபா வீதம் இடர் கடன் வழங்கப்பட்டதாக சங்கத்தின் தலைவி திருமதி உ.சண்முகநாதன் தெரிவித்தார்.

அங்கத்தவர்களுக்குக் கொடுக்கப்படும 20 ஆயிரம்ரூபா இடர் கடனை எதிர்காலத்தில் 25 ஆயிரம் ரூபாவாக வழங்குவதற்கு தாம் தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும தெரிவித்தார். (உ-29)

# யாழ்.மாவட்ட அபிவிருத்தி குறித்த

# செய்தித்துளிகள்

## அஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஈழந்து இலக்கிய முன்னோடியும் முற்போக்கு சிந்தனையாளருமாகிய கே.கணேசின் அஞ்சலிக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டதாரிகள் பிரிவில் மு.அநாதரட்சகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ் அஞ்சலி கூட்டத்தில் செ.மதுசூதனன், க.சொக்கலிங்கம், செ.திருநாவுக்கரசு, தெணியான், சா.தியாகலிங்கம் ஆகியோர் உரையாற்றவுள்ளனர். (உ-19)

## எயிட்ஸ் விழிப்புணர்வு

(தனங்கிளப்பு)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சிக் கிளை அனுசரணையுடன் வட பகுதியில் உள்ள வலயக் கல்விப் பணிமனைப் பிரிவுகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான எயிட்ஸ் நோய் சம்பந்தப்பட்ட வதிவிடப் பயிற்சி கிளிநொச்சியில் உள்ள மாவட்ட செஞ்சிலுவைச் சங்கத் தலைமைப் பணிமனையில் நடத்தப்பட்டது.

கடந்த 10,11 ஆம் திகதிகளில் இடம்பெற்ற பயிற்சி நெறியில் 35 ஆசிரியர் கலந்து கொண்டனர்.

இவ் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த ஆசிரியர்கள் தாங்கள் கடமையாற்றும் கல்வி வலயங்களில் உள்ள ஏனைய ஆசிரியர்களுககும் மாணவர்களுக்கும் எயிட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வை வழங்குவார்கள் என இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி மாவட்டக் கிளையின் பொருளாளர் டாக்டர் கெ.வி.கெ.திருலோக மூர்த்தி குறிப்பிட்டார்.(உ-37)

## திருக்குறள் மனனப் போட்டி

(கோப்பாய்)

யாழ்.வலயப் பாடசாலைகளிடையே பிரிவு ரீதியாக திருக்குறள் மனனப்போட்டிக்கள் நடத்தப்படவுள்ளன.

அதற்கமைய தரம் - 4 தொடக்கம் தரம் - 5 வரையான வகுப்புக்கள் கீழ்ப்பிரிவாகவும், தரம் - 6 முதல் தரம் - 9 வரையான் வகுப்புக்கள் மத்திய பிரிவாகவும் தரம் -10 தொடக்கம் தரம் - 13 வரையான வகுப்புக்கள் மேற்பிரிவாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

கீழ்ப்பிரிவினர் முதல் 24 வரையான அதிகாரங்களையும் மத்திய பிரிவு 38 வரையான அதிகாரங்களையும், மேற்பிரிவினர் 78 அதிகாரங்களையும் ஓதுதல் வேண்டும் எனவும் ஒவ்வொரு பிரிவினரும் கூடுதலான அதிகாரங்களை மனனஞ்

## இயந்திரம் திருத்தம்

(யாழ்ப்பாணம்)

கைதடி ஆயுள் வேத வைத்திய சாலையின் மலசல கூட கழிவு சுத்திகரிக்கும் இயந்திரத்தினைத் திருத்தியமைக்கவென 55 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு தற்போது திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இவ் இயந்திரம் பழுதடைந்திருந்தமை காரணமாக உள்நோயாளர் விடுதி இயங்க முடியாத நிலை காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## மாலைதீவு எம்.பிக்களுடன் கதிர்காமர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

மாலைதீவு பாராளுமன்றிற்கு தெரிவான புதிய உறுப்பினர்களின் குழுவினர் இலங்கையின் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை சந்தித்து தமது பாராளுமன்றில் அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள், தற்போதைய அபிவிருத்திகள பற்றி எடுத்துக் கூறியுள்ளனர்.

இதன் போது தமது நாட்டில் பல கட்சி ஜனநாயகம் ஒன்றினை ஏற்படுத்தவேண்டியதன் அவசியத்தையும் விளக்கியுள்ளனர். (உ-6)

## மட்டக்களப்பு சோகமயம்

(மட்டக்களப்பு)

தேச விரோதிகளின் துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட லெப்ரினன்ட் கேணல் சேனாதிராசாவின் மறைவையொட்டி கடந்த புதன் கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தில்பல இடங்களில வர்த்தக நிலையங்களை பூட்டி மக்கள் துக்கம் அனுஷ்டித்தனர்.

கொக்கட்டிச்சோலை, செங்கலடி, ஏறாவூர் ஆகிய இடங்களில் வர்த்தக நிலையங்களைப் பூட்டி மக்கள் துக்கம் அனுஷ்டித்தனர். அதேவேளை மாவட்டம் எங்கும் சோகமயமாகக் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-121)

## விரிவுரைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விவசாயபீடத்தில் பனை-தென்னை வள தொழில்நுட்பச் சான்றிதழ் கற்கை நெறிக்கான இரண்டாம் அரையாண்டு விரிவுரைகள் எதிர் வரும் 19 ஆம் திகதி திங்கட் கிழமை பி.ப. 2.00 மணிக்கு விவசாயபீடத்தில் ஆரம்பமாகவுள்ளதாக கற்கை நெறியின் இணைப்பாளர் கலாநிதி திருமதி சிவமதி

இம் முடிவினை மேற்கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

தமது குடும்பத்தினருடன் வெளி நாட்டுப் பயணத்தை முடித்துக் கொண்டு நாடுதிரும்பிய உடனே இத்தீர்மானத்தை அறிவித்துள் ளார்.

மேலும், இந் நாட்டின் மக்கள் மீதும் நாடு மீதும் தான் அதீத அக்கறை கொண்டுள்ளேன் என்றும் கூறிய அவர், ஹெல உறுமயக்கட்சியில் தான் ஒரு உறுப்பி

# யாழ்.மாவட்ட அபிவிருத்தி குறித்த திட்ட முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளன

(திருநெல்வேலி)

இவ் ஆண்டிற்கான யாழ்.மாவட்ட அபிவிருத்தி பற்றிய திட்ட முன் மொழிவுகளை உடனடியாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளிக்குமாறு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் நாவின்ன அவசர கடித மூலம் கேட்டுள்ளார்.

கையளிக்கப்படும் திட்ட முன் மொழிவுகள் இறுதியானதாகவும் மாற்றம் செய்ய முடியாததாகவும் இருக்க வேண்டும் எனவும் அக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது பற்றிக் கருத்துக்கூறிய கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிறேமச்சந்திரன்,

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்திலும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக் கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கப்பட்டு அனுமதியும் அளிக் கப்பட்டது.

அத்துடன், யாழ்.மாவட்ட அபி விருத்திக் குழுக் கூட்டத்தை அர சாங்க அதிபர் கூட்டவில்லை என் பதுடன் அபிவிருத்திக் குழுவுக்கான தலைவரை நியமிப்பதில் ஜனாதி பதி அசண்டையீனமாக உள்ளார் எனச் சுட்டிக்காட்டினார். (உ-43)

## தொழில் வாய்ப்பு விவகாரம்

# உலக வங்கி ஒதுக்கிய நிதியை உடன் வழங்குவது சாத்தியமில்லை

(கொழும்பு)

ஏப்ரலில் தாம் பதவிக்கு வந் தால் வேலையற்ற 60 ஆயிரம் பேருக்கு தொழில் வாய்பை வழங்குவது என்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வாக்குறுதி கள் தொடர்பாக உலக வங்கி கருத்து வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு உதவி வழங்கும் அமைப்புகளுள் ஒன்றான உலக வங்கியின் வாக்குறுதிப்படி ஒதுக்கப்பட்ட தொகையான 2.45 மில்லியன அமெரிக்க டொலர்களை தேர்தலின் பின்னர் ஒரு அரசாங் கத்திற்கு உடனடியாக வழங்கு வது சாத்தியமானதல்ல என்று 60 ஆயிரம் வரையான இளைஞர் - யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பை வழங்குவது என அண்மையில் ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்ட மொன்றில் பேசியமை குறித்து உலக வங்கியின் வறுமை ஒழிப்பு மற்றும் பொருளாதார முகாமைத் துவப் பிரிவுகள் தெரிவித்துள்ளன.

கடந்த சில வருடங்களாகவே உலக வங்கி அரசாங்கத்துடன் மேற்கொண்ட கலந்துரையாடல் களின் கருத்துக்களுக்கு முர ணான ஜனாதிபதியின் இக் கூற்று பற்றி கவனம் செலுத்தப்பட வேண் டியது அவசியம் என்றும் உலக வங்கி தெரிவித்துள்ளது. (உ-6)

லான அதிகாரங்களை மனனஞ் செய்யுமிடத்து அவர்களுக்கு விசேட பரிசில்கள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-79)

## கோதுமை மாவை ஏற்றுமதி செய்யத்திட்டம்

(கொழும்பு)

பிறிமா நிறுவனம் முதற் தட வையாக கோதுமை மாவை ஏற்றுமதி செய்வது குறித்து திட்டமிட்டு வருகின்றதாக பிறிமா நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன் வருடாந்தப் பெறுமதி 340 கோடி ரூபாவாக இருக்கும். கோதுமைமா சார்ந்த துறையை தாராள மயப்படுத்துவது என்று அரசாங்கம் முடிவு செய்துள்ளதன் காரணமாக ஏற்றுமதிக் கட்ட ளைகள் கிடைத்துள்ளன.

இந்த ஏற்றுமதி மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு கணிசமான பங்களிப்பு கிடைக்கும் எனவும் வெளிநாட்டு நிதியங்கள் பயன் பெறும் எனவும் பிறிமா நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (உ-8)

## செயலமர்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சிக் கல்வி வலயத் திற்கான விஞ்ஞான பாட சேவைக் காலச் செயலமர்வும், சமூகக் கல்வி மற்றும் வர்த்தக ஆசிரியர் களுக்கான தரவட்டச் செயலமர் வும் எதிர்வரும் 18-19 ஆம் திகதி களில் சாவகச்சேரி இந்துக்கல் லூரியில் நடைபெறவுள்ளது. (உ-29)

பாளர் கலாநிதி திருமதி சிவமதி சிவச்சந்திரன் அறிவித்துள்ளார். (உ-18)

## பரீட்சை திங்களன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தொழிலாளர் கல்விச் சான்றி தழ் கற்கை நெறி, தொழிலாளர் கல்வி டிப்ளோமா கற்கை நெறி என்பவற்றின் 2001/2002 கல்வி யாண்டிற்கான இரண்டாம் அரை யாண்டுப் பரீட்சைகள் திட்டமிட்ட படி எதிர்வரும் 19 ஆம் திகதி திங் கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து நடை பெறவுள்ளது.

பரீட்சார்த்திகளுக்கான அனு மதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கிடைக்கப் பெறாதோர் அலுவலக நேரங்களில் தொழிலாளர் கல்வி அலகில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம் என பரீட்சைப் பகுதி யில் உதவிப் பதிவாளர் தெரிவித் துள்ளார் (உ)

## கொடியேற்றம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டச்சு வீதி ஸ்ரீ பழனியாண்டவர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று சனிக்கிழமை கொடி யேற்றத்துடன் ஆரம்பமாக வுள்ளது. எதிர்வரும் 31 மற்றும் 1ஆம் திகதிகளில் ஆலயத்தில் தேர், தீர்த்த உற்சவங்கள் இடம் பெறவுள்ளன. (உ-29)

# சங்கானைக் கல்விக் கோட்ட தமிழ்த் தினப் போட்டி முடிவுகள்

(சங்கானை)

சங்கானைக் கல்விக் கோட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் பெயர் விபரங்கள் முறையே,

**வாசிப்பு (பிரிவு I)**

யோ.றஜீவன் - யா/அராலி சரஸ்வதி ம.வி.
தே.காயத்திரி - தொல்புரம் விக்னேஸ்வரா
இ.காயத்திரி - யாழ்ப்பாணக் கல்லூரி

**வாசிப்பு (பிரிவு II)**

இ.சங்கீதா - சித்தங்கேணி ஸ்ரீகணேச வித்தி.
சூ.கீர்த்தனா - அராலி சரஸ்வதி ம.வி.
நா.தனுசா - மூளாய் சைவப்பிரகாச வித்தி.

**ஆக்கத்திறன் வெளிப்பாடு கதைகூறல் (பிரிவு I)**

நா.நாகசிந்துஜா - மூளாய் சைவப்பிரகாச வித்தி.
கி.விதுரா - சங்கானை சிவப்பிரகாச ம.வித்தி.

**ஆக்கம் எழுத்து (பிரிவு I)**

இ.அனோஜனா - அராலி சரஸ்வதி ம.வித்தி.
ப.பவதாரணி - சித்தங்கேணி ஸ்ரீ கணேசா வித்தி.
கி.சிவாஜினி - தொல்புரம் விக்னேஸ்வரா

**கட்டுரை வரைதல், கடிதம் எழுதுதல் (பிரிவு II)**

ப.பவீதா - பண்ணாகம் மெய்கண்டான் ம.வித்தி.
ம.துளசி - யாழ்ப்பாணக் கல்லூரி
ஜெ.ஹரிஹரசன்- சங்கானை சிவப்பிரகாச ம. வித்தி.

**கட்டுரை வரைதல், கடிதம் எழுதுதல் (பிரிவு III)**

ச.தாரணி - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி
தி.தயாணிகா - சங்கானை சிவப்பிரகாச ம.வித்தி.
க.ஞானசௌந்தரி - அராலி சரஸ்வதி ம.வித்தி.

**கட்டுரை வரைதல் (பிரிவு IV)**

வீ.அபிராமி - மூளாய் சைவப்பிரகாச வித்தி.
ச.செல்வரூபன் - அராலி சரஸ்வதி ம.வித்தி.
ந.அனுஜா - சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தி.

**தமிழியல் கட்டுரை வரைதல்,இலக்கியம் (பிரிவு V)**

ம.கௌசல்யா - வட்டு. இந்துக் கல்லூரி
பொ.சிவானந்தி- சங்கானை சிவப்பிரகாச ம.வித்தி.

**இலக்கணப் போட்டி (பிரிவு IV)**

சூ.சௌதாமினி - பண்ணாகம் மெய்கண்டான் ம.வித்தி.
ச.கீர்த்தனா - வட்டு. மத்திய கல்லூரி
க.நிரோஜினி - வட்டு .இந்துக் கல்லூரி

**இலக்கணப் போட்டி (பிரிவு V)**

சி.கயல்விழி - பண்ணாகம் மெய்கண்டான் ம.வித்தி.

**கவிதையாக்கல் (பிரிவு IV)**

ஐ.றபிந்தா - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி
றா.ஆரணி - சங்கானை சிவப்பிரகாச ம.வித்தி.

**கவிதையாக்கல் (பிரிவு V)**

ச.நிஷாந்தி - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி
நா.அரங்கா - சங்கானை சிவப்பிரகாச ம.வித்தி.
யூ.பி.அ.ரஞ்சித்குமார்- யாழ்ப்பாணக் கல்லூரி

**சிறுகதையாக்கல் (பிரிவு IV)**

கு.சயத்தா - பண்ணாகம் மெய்கண்டான் வித்தி.
க.துவாரகா - அராலி சரஸ்வதி ம.வி.
ந.சுதர்சினி - சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தி.

**சிறுகதையாக்கல் (பிரிவு V)**

கு.கல்யாணி - பண்ணாகம் மெய்கண்டான் வித்தி.

**பேச்சு (பிரிவு I)**

க.ரஞ்சினி - யாழ்ப்பாணக் கல்லூரி
சா.கலைப்பிரியா- வட்டு. கார்த்திகேயா வித்தி.
ஜெ.வினோத் - வட்டு. மத்திய கல்லூரி

**பேச்சு (பிரிவு II)**

இ.கஸ்தூரி - சித்தங்கேணி ஸ்ரீகணேசா வித்தி.
இ.அபிராமி - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி
தே.சதீஸன் - வட்டு. மத்திய கல்லூரி

க.சிதம்பரபாலினி- தொல்புரம் விக்கினேஸ்வரா.
ச.கிரிசாந்தினி- சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தி.

**இசை தனி (பிரிவு II)**

சி.ரிசாயினி - வட்டு.மத்திய கல்லூரி.
வே.திவ்வியகரி- யாழ்ப்பாணக் கல்லூரி.
உ.உஷனா - சங்கானை சிவப்பிரகாச ம.வி.

**(பிரிவு III)**

ச.சிவறமணன்- சங்கானை சிவப்பிரகாச ம.வி.
க.தனுப்பிரியா- அராலி சரஸ்வதி ம.வி.
வி.கங்கா - வட்டு.இந்துக் கல்லூரி

**(பிரிவு IV)**

கு.சொரூபிகா - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.
சு.தேவிகா - வட்டு. இந்துக்கல்லூரி.
செ.சுகப்பிரதா - அராலி சரஸ்வதி ம.வி.

**(பிரிவு V)**

வெ.சுபகரி - யாழ்ப்பாணக் கல்லூரி
க.தாரணி - வட்டு. இந்துக் கல்லூரி
அ.சிவசக்தி - சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி

**இசை குழு (பிரிவு I)**

வட்டு. மத்திய கல்லூரி
சித்தங்கேணி ஸ்ரீகணேசா வித்தி.
சங்கானை சிவப்பிரகாச ம.வித்தி.

**(பிரிவு II)**

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி
மூளாய் சைவப்பிரகாச வித்தி.
வட்டு.மத்திய கல்லூரி

**நடனம் (பிரிவு I)**

ஜெ.அபிராமி - யாழ்ப்பாணக்கல்லூரி
ஸ்ரீ.சொருபிகா - வட்டு. மத்திய கல்லூரி.
த.நிதுஜா - தொல்புரம் விக்கினேஸ்வரா

**நடனம் தனி (பிரிவு II)**

ஸ்ரீ.கௌசிகா - யாழ்ப்பாணக் கல்லூரி
சோ.றேகா - பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.
க.கஜேந்தினி - வட்டு. இந்துக்கல்லூரி.

**(பிரிவு III)**

உ.சுகிர்த்தா - சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி
ந.யசோதா - பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.
த.குமுதினி - வட்டு. இந்துக் கல்லூரி.

**(பிரிவு IV)**

அ.துவாரகா - யாழ்ப்பாணக் கல்லூரி
ச.விஜிதா - வட்டு. இந்துக்கல்லூரி
த.பிரதீபா - பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.

**நடனம் தனி (பிரிவு V)**

ஜெ.டா.தபித்தா-யாழ்ப்பாணக் கல்லூரி
நா.நிரூஜா- சங்கானை சிவப்பிரகாச ம.வி.
ப.சசிகலா- வட்டு.இந்துக் கல்லூரி

**நடனம் குழு (பிரிவு I)**

வட்டு.மத்திய கல்லூரி
சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி
வட்டு.இந்துக் கல்லூரி

**நாட்டிய நாடகம் (பிரிவு II)**

சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி
யாழ்ப்பாணக்கல்லூரி
சங்கானை சிவப்பிரகாச ம.வி.

**நாடகம் (திறந்த போட்டி)**

சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி
பிளவத்தை அ.மி.த.க.பா.
சங்கானை சிவப்பிரகாச ம.வி.

**வில்லுப்பாட்டு (திறந்த போட்டி)**

## சிறுவிளம்பரம்

**விற்பனைக்கு**

திருமண விருந்துபசாரத்திற்கும், கோயில் வேள்விகளுக்கும் உகந்த நிலையில் பெரிய இன ஆட்டுக்கடா விற்பனைக்கு உண்டு. தொடர்பு : 20, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (C-293)

## நல்ல சினிமா ஊடாக இன்னுமோர் உலகம்

(யாழ்ப்பாணம்)

நல்ல சினிமா ஊடாக இன்னுமோர் உலகம் எனும் மகுடத்தின் கீழ், கட்டவேலி- நெல்லியடி ப.நோ.கூ. சங்கத்தின் கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்ற ஆதரவில் திரைப்பட வட்டத்தினால் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு சங்க மண்டபத்தில் 'ஜனநாதன்' இயக்கத்தில் உருவான 'இயற்கை' முழு நீளத்திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது.

திரைப்பட முடிவில் விமர்சனமும், கலந்துரையாடலும் இடம்பெறவிருப்பதால் திரைப்பட ரசனையாளர் அனைவரையும் இந் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு திரைப்பட வட்டத்தினர் கேட்டுள்ளனர். (உ)

## ஊடகச் சுதந்திர சட்டமூலம் சமர்ப்பணம்

(கொழும்பு)

ஊடகச் சுதந்திரம் தொடர்பான சட்டமூலம் ஒன்றை சமர்ப்பிக்க ஒருங்கிணைக்கப்பட்ட எதிர்க் கட்சிகள் தீர்மானித்திருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம் பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.இவ்வாறு எதிர்க்கட்சிகளால் சமர்ப்பிக்கப்படவுள்ள சட்ட மூலத்தில் 3 ஊடகங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்படும்.

இதில் அரச ஊடகங்களின் பணிப்பாளர் சபைக்கு உறுப்பினர்களை நியமித்தல் தொடர்பான முக்கிய விடயங்கள் உள்ளடக்கப்படும். இதற்காக பெதுமக்களின் கருத்துக்களையும் அறிய முடிவு செய்யப்பட்டுள்ளது.

(உ-4,64)

## அமிருக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் செயலாளர் நாயகம் அமரர் அ.அமிர்தலிங்கம், முன்னாள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வெ.யோகேஸ்வரன் ஆகியோரின் 15 வது நினைவுதின நிகழ்வு கடந்த செவ்வாயன்று கூட்டணியின் யாழ். அலுவலகத்தில் இடம்பெற்றது.

யாழ்.அலுவலக நிர்வாகப் பொறுப்

### சிறுகதையாக்கல் (பிரிவு V)

கு.கல்யாணி - பண்ணாகம் மெய்கண்டான் வித்தி.

### பேச்சு (பிரிவு I)

க.ரஞ்சினி - யாழ்ப்பாணக் கல்லூரி
சா.கலைப்பிரியா- வட்டு. கார்த்திகேயா வித்தி.
ஜெ.வினோத் - வட்டு. மத்திய கல்லூரி

### பேச்சு (பிரிவு II)

இ.கஸ்தூரி - சித்தங்கேணி ஸ்ரீகணேசா வித்தி.
இ.அபிராமி - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி
தே.சதீஸன் - வட்டு. மத்திய கல்லூரி

### பேச்சு (பிரிவு III)

மோ.மைதிலி - வட்டு. மத்திய கல்லூரி
ச.விஜயலதா - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி
சி.கவிதா - பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.

### பேச்சு (பிரிவு IV)

சி.சுனித்தா - பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.
உ.சிவாணி - வட்டு. மத்திய கல்லூரி
ச.யசிந்தன் - யாழ்ப்பாணக் கல்லூரி

### பேச்சு (பிரிவு V)

ச.சுகன்யா - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி
வை.ரசிந்தா - பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.
ச.நிகேஷ் - யாழ்ப்பாணக் கல்லூரி

### பாவோதல் (பிரிவு I)

வி.ஸ்ரீசுபாங்கி - வட்டு. மத்திய கல்லூரி
து.யமுனாமலர்- யாழ்ப்பாணக் கல்லூரி
ப.சிவகாமி - பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.

### பாவோதல் (பிரிவு II)

ச.சர்மிளா - வட்டு. மத்திய கல்லூரி
செ.சரிதா - யாழ்ப்பாணக் கல்லூரி
இ.கிருஸ்ணவேணி- பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.

### பாவோதல் (பிரிவு III)

தி.சேந்தன் - யாழ்ப்பாணக் கல்லூரி
ச.கீரன் - வட்டு. மத்திய கல்லூரி
ச.வேணுகா - வட்டு. இந்துக் கல்லூரி

### பாவோதல் (பிரிவு IV)

ப.உமா - பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.
அ.யோகினி - வட்டு. மத்திய கல்லூரி
க.வாகீசன் - அராலி சரஸ்வதி ம.வி.

### பாவோதல் (பிரிவு V)

ச.சிவந்தன் - யாழ்ப்பாணக் கல்லூரி
ம.மயூரி - பண்ணாகம் மெய்கண்டான்ம.வி.
மா.ஜீவிதா - வட்டு.இந்துக் கல்லூரி.

### இசையும் அசைவும் (பிரிவு I)

இ.கேவிகா - மூளாய் சைவப்பிரகாச வித்தி.

வட்டு.இந்துக் கல்லூரி

### நாட்டிய நாடகம் (பிரிவு II)

சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி
யாழ்ப்பாணக்கல்லூரி
சங்கானை சிவப்பிரகாச ம.வி.

### நாடகம் (திறந்த போட்டி)

சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி
பிளவத்தை அ.மி.த.க.பா.
சங்கானை சிவப்பிரகாச ம.வி.

### வில்லுப்பாட்டு (திறந்த போட்டி)

யாழ்ப்பாணக்கல்லூரி
மூளாய் சைவப்பிரகாச வித்தி.
சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி

### விவாதம் (திறந்த போட்டி)

யாழ்ப்பாணக்கல்லூரி
அராலி சரஸ்வதி ம.வி.
வட்டு. இந்துக் கல்லூரி

### தமிழறிவு வினாவிடை(திறந்த போட்டி)

பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.
சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி
வட்டு.இந்துக் கல்லூரி

### விசேட நாட்டுக்கூத்து (திறந்த போட்டி)

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி
மூளாய் சைவப்பிரகாச வித்தி.

### சிந்து நடைக்கூத்து (திறந்த போட்டி)

பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.

### நாட்டுக்கூத்து தென்மோடி (திறந்த போட்டி)

சங்கானை சிவப்பிரகாச ம.வி.

(உ-34)

## குற்றச் செயல்களைத் தடுக்க விசேட பாதுகாப்பு ஏற்பாடு

(கொழும்பு)

கொழும்பு நகரில் இடம்பெறும் குற்றச்செயல்களைத் தடுக்கவென விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

இதற்காக விசேட பொலிஸ் குழுக்களும் அமைக்கப்படவுள்ளன. குற்றச் செயல்கள் அதிகம் இடம்பெறுவதாக இனம் காணப்பட்ட புறக்கோட்டை, கிராண்பாஸ், மட்டக்குளி, முகத்துவாரம் ஆகிய பகுதிகளிலேயே இப் பாதுகாப்பு நடவடிக்கைகள் விசேடமாக மேற்கொள்ளப்படவுள்ளன.

கொலை, கொள்கை, கடத் தல் உட்பட பல சட்டவிரோத மற்றும் சமூக விரோத குற்றச் செயல்களைத் தடுப்பதே இதன் நோக்கம் என பொலிஸ்மா அதிபர் இந்திர டீ சில்வா தெரிவித்துள்ளார்.

(உ-4,62)

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் செயலாளர் நாயகம் அமரர் அ.அமிர்தலிங்கம், முன்னாள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வெ.யோகேஸ்வரன் ஆகியோரின் 15 வது நினைவுதின நிகழ்வு கடந்த செவ்வாயன்று கூட்டணியின் யாழ். அலுவலகத்தில் இடம்பெற்றது.

யாழ்.அலுவலக நிர்வாகப் பொறுப்பாளர் செல்லையா விஜயரட்ணம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மற்றும் முன்னாள் மாநகர சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு உருவப்படங்களுக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். (உ)

## பரீட்சார்த்திகள் குழப்பம்

(அம்பாறை)

தமிழ்மொழி மூல ஆசிரியர் ஆட்சேர்ப்புப் பரீட்சை எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறித்து விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத் தமிழ்மொழிப் பரீட்சார்த்திகளுக்கு அம்பாறை மேற்கிலுள்ள சிங்களப் பிரதேசத்தில் பரீட்சை நிலையங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

இதனால், பெரிய நீலாவணை- கல்முனை- சம்மாந்துறை- அக்கரைப்பற்று - பொத்துவில் வரையுள்ள தமிழ்மொழி மூலப் பரீட்சார்த்திகள் அம்பாறைக்கு அப்பாலுள்ள ஹிங்குறான, மகாஓயா, றஜகலதென்ன, உனசேரங்கட போன்ற தூர இடங்களுக்கு நேரகாலத்துடன் பயணித்துப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

(உ-121)

# ஐரோ. சமூகத்தின் உதவிகளைப் பெற பிரிட்டன் அனுசரணை வழங்கும்

## கதிர்காமரிடம் உறுதிமொழி

(பிரிட்டன்)
நாட்டில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக பிரிட்டனின் பொதுநலவாய விவகாரங்கள், இராஜாங்க அமைச்சர் மைக் ஓலபிறேம் இலங்கையில் உள்ள பல் கலைக்கழகங்களில் ஆங்கிலக கல்வியினை மேற்கொள்வதற்கென பிரிட்டன் உதவி வழங்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

பிரிட்டனுக்கான விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருக்கும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர் அவர் இந்தக் கருத்துக்களினை வெளியிட்டார்.

இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஐரோப்



பிய சமூகத்தின் உதவிகளை பெற்றுக்கொள்வது சம்பந்தமாகவும் பிரிட்டன் எந்தவித மறுப்பும் இன்றி அனுசரணை வழங்கும் என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

இந்தச் சந்திப்பின் பொழுது நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான நடவடிக்கைகள் சம்பந்தமான தற்போதைய நிலை பற்றியும் அதனை முன்னெடுத்துச் செல்வதற்கென தற்போதைய ஆட்சிப்பீடத்தில் உள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் மேற்கொண்டு வரும் முயற்சிகள் பற்றியும் அமைச்சர் லக்ஷமன் கதிர்காமர் மைக் ஓல பிறேமிற்கு விளக்கம் கூறினார்.

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பிரிட்டனில் சர்வதேச அபிவிருத்திக்கான துணை அமைச்சர் கிளானிகேனையும் சந்தித்து உரையாடியுள்ளார்.

(உ-121)

# போருக்கச் செயற்பாடுகளில் அரசு வெளிப்படையாகவே செயற்படுகிறது

## எழிலன் குற்றச்சாட்டு

(திருகோணமலை)
தற்போதுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் போர் முனைப்பு செயறபாடுகளில் ஈடுபட்டு வருவது வெளிப்படையாகத் தெரிகின்றது. என திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்துள்ளார்.

திருமலையில் இடம்பெற்ற விடுதலைப்புலிகளின் முதற் தாக்குதல் தளபதி லெப்.சீலனின 21வது ஆண்டு நிறைவு நாளில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே எழிலன் இதனைத தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துரைக்கையில் ,

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் வடக்கு- கிழக்கில் உள்ள தமிழ் பேசும் மக்களுக்கான உரிமைகளை வழங்குவதில் என்றுமே தயாராக இருந்ததுமில்லை, தயாராக இருக்கப் போவதுமில்லை.

இந்த அரசாங்கம் சமாதானத்திற்கு முரணான கருத்துக்களை வெளியிடுவதில் தீவிரமாக செயறபட்டுவரும் நிலையில் தமிழ் மக்களின் உரிமைகளை தமிழ் மக்களாகிய நாமே பாதுகாக்க வேண்டும்.

அத்துடன் எந்தச் சவால் வந்தாலும் அதனை எதிர்கொள்ளத் தயாராக இருக்கவேண்டும் எனத் தெரிவித்தார். (உ-121,8)

# உலக வங்கியின் ஒத்துழைப்புக்கு ஜனாதிபதி நன்றி தெரிவிப்பு

(கொழும்பு)
கடந்த 50 ஆண்டு காலப் பகுதியில் இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக உலக வங்கி ஆற்றிய பங்கு



கின்றது என்றார்.

(உ-121)

### நாட்டுப் பற்றாளரின் குடும்பத்திற்கு நிதி அன்பளிப்பு

அகில இலங்கை தமிழ்த் தேசிய ஊடகவியலாளர்களின்

# மீன் பிடிக்க அனுமதி மறுப்பு ம.உ.ஆ.கு.வில் முறைப்பாடு.

(திருநெல்வேலி)
சாவகச்சேரி ,கோவிலாக் கண்டி, தனங்கிளப்பைச் சேர்ந்த 150 மீனவக் குடும்பங்கள் தம்மை சுதந்திரமாக மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும் எனக் கோரி முறைப்பாடு ஒன்றினை நாவற்குழி தெற்கு சிறிமகாவிஸ்ணு சங்க ஏறபாட்டில் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம நேற்று முன்தினம் கையளித்துள்ளார்கள்.

ஏற்கனவே தமிழத தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் யாழ்.மாவட்ட அரச அதிபர் ஆகியோருக்கு இது குறித்து முறையிட்டும் சாதகமான பதில் கிடைக்காத காரணத்தினாலேயே இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ். மாவட்ட தளபதி சுசில் சந்திர பாலாவிடம் விளக்கம் கேட்கவுள்ளதாக யாழ். மனித உரிமை ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-19,43)

# வெற்றிலையுடன் இணைந்த பீடா வடிவில் போதைப் பொருள்

## பாடசாலை மாணவர் அதிகம் நுகர்கின்றனராம்

(கொழும்பு)
பாடசாலை மாணவர்களிடையில் ஆபத்தான போதைப் பொருள் பாவனை அதிகரித்து வருவதைத் தொடர்ந்து இதனைத் தடுக்க கல்வியமைச்சு பொலிஸாருடன் இணைந்து கூட்டாக ஒரு விசேட திட்டமொன்றை அமுல்படுத்தவுள்ளது.

புதுவகையான போதைவஸ்து ஒன்று வெற்றிலைகளுடன் இணைந்து உண்ணப்படுகிறது. பீடா போன்ற இது பாபூல் என அழைக்கப்படுகிறது. இதுவே அண்மைக்காலமாக பாடசாலை மாணவர்கள் மத்தியில் அறிமுகப் படுத்தபபட்டுள்ளது.

இதுபற்றி மாணவர்களும் பெற்றோர்களும் அதில் விழிப் படைய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், இவ்விடயம் தொடர்பாக பாடசாலை அதிபர்களுடன் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, கொழும்பு மாவட்டத்தில் மேற்படி பாபூல் விற்பனை செய்யும் நிலையங்களைச் சோதனையிட்டு விற்பனை செய்வோரைக் கைது செய்யவென சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக மாவட்ட பொலிஸ் அதிகாரி சிறிசேன ஹேரத் தெரிவித்துள்ளார்.

இப் போதைமருந்து வெற்றிலையுடன் இணைத்து உண்ணப்படுவது மிக மிக ஆபத்தான ஒன்று என்றும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

(உ-6)

# அரச நிர்வாகத் துறையை மீளமைக்கத் தீர்மானம்

(கொழும்பு)
அரச நிர்வாகத்துறையை மீளமைப்புச் செய்ய தீர்மானித்திருப்பதாக பொது நிர்வாகத் துறை அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

இது குறித்து தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் சம்பந்தப்பட்ட குழுக்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தவிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற அரசாங்க அதிபர்கள் ,பிரதேச செயலாளர்களுக்கான மாநாட்டிலேயே அமைச்சர் இந்தக் கருத்தினை வெளியிட்டுள்ளார்.

அரச நிர்வாகத் துறையில் தற்போது எழுந்திருக்கின்ற சிக்கல்கள் பற்றியும் அதற்கு தீர்வு காணப்படுவதற்கு அவசியமான யோசனைகள் தொடர்பாகவும் கலந்துரையாடுவதே இந்த மாநாட்டின் நோக்கமாக அமைந்தது என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.(உ-121)

(கொழும்பு)

கடந்த 50 ஆண்டு காலப் பகுதியில் இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக உலக வங்கி ஆற்றிய பங்கு அளப்பாியது. உலக வங்கியின் நடவடிக்கை பற்றி பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும் எமது ஆடசிக் காலத்தில் மக்களுடன் சிறந்த உறவுகளை உலக வங்கி பேணிவந்தது என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

உலக வங்கி இலங்கைக்கு உதவி வழங்க ஆரம்பித்து 50 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவத்தில் ஜனாதிபதி உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் பொதுஜன



ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கு உலக வங்கியின் உதவி கிடைத்தது.

ஆட்சி மாறியதால் இந்தத் திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டாலும் புதிய அரசாங்கம் அதனை மீண்டும் ஆரம்பித்திருக்கின்றது என்றார்.

(உ-121)

## நாட்டுப் பற்றாளரின் குடும்பத்திற்கு நிதி அன்பளிப்பு

அகில இலங்கை தமிழ்த் தேசிய ஊடகவியலாளர்களின் பொதுக்கூட்டம் கொழும்பு ரண்முத்து ஹோட்டலில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

இந் நிகழ்வில் இலங்கை சுதந்திர ஊடகவியலாளர் சங்கத் தலைவர் சுகந்த தேசப் பிரிய பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் நாட்டுப் பற்றாளர் நடேசனின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், அவரது குடும்பத்தவர்க்கு இரண்டு லட்சம் ரூபாவுக்கான காசோலையை திருமதி கௌரி நடேசன் பெற்றுக கொண்டார்.

தொடர்ந்து மீண்டும் பொதுக் குழு கூடிய வேளையில் அகில இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவராக 2ம் முறையும் ஆர்.துரைரெத்தினம் தெரிவுசெய்யப்பட்டார்.(உ-121)

# ஐ.ம.சு.மு. தலைவர்கள் ஒன்று கூடி ஆராய்வு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்கள் நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டுள்ளனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணி, மற்றும் ஜே.வி.பி என்பவற்றின் முக்கிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்ற இந்தக் கலந்துரையாடலின் போது பொலிஸ் பதவிகளில் அண்மையில் மேற்கொள்ளப பட்ட பதவி உயர்வுகள் அடங்கலாக ஏனைய முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டன.

எனினும் விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகள் குறித்து இச்சந்திபபில் ஆராயப்படவில்லை என அறிவிக்கப் பட்டுள்ளது.

(உ-121)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கொற்றாவத்தை அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை பாடசாலையின் திறந்தவெளி அரங்கில் அதிபர் தா. வெற்றிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

(உ-16)

இது குறித்து தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் சம்பந்தப்பட்ட குழுக்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தவிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன் சிக்கல்கள் பற்றியும் அதற்கு தீர்வு காணப்படுவதற்கு அவசியமான யோசனைகள் தொடர்பாகவும் கலந்துரையாடுவதே இந்த மாநாட்டின் நோக்கமாக அமைந்தது என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.(உ-121)


விவாத அரங்கு -4

விடயம்

சமூக, கலாசாரப் பிறழ்விற்குக் காரணமாக அமைபவர்கள் தற்கால இளைஞர்களே! யுவதிகளே!

நடுவர் : சிவ.சரவணபவன் (சிற்பி)
(முன்னாள் யா/வைத்தீஸ்வரா கல்லூரியின் அதிபர்)

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள

அனுப்பவேண்டிய முகவரி

விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

க.பொ.த. (சா.த)
மாணவர்களே! வலம்புரியில்
தொடர்ந்து பயிற்சி
வினாத்தாள்கள்
வெளிவருகின்றன.

# கூட்டமைப்பு எம்.பிக்கள் புலிகள் சந்திப்பு இன்று

மட்டு. அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சந்திப்பு இன்று சனிக்கிழமை கிளிநொச்சியிலுள்ள சமாதானச் செயலகத்தில் இன்று 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராசசிங்கம், பா.அரியநேத்திரன், த.கனகசபை, எஸ்.ஜெயானந்தமூர்த்தி, செல்வி க.தங்கேஸ்வரி அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.பத்மநாதன் ஆகியோர் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இச்சந்திப்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்து விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கலந்துரையாடுவார்.

மட்டு. அம்பாறை சிறப்புத் தளபதி த.ரமேஸ் மட்டு அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் ஆகியோர் கலந்து கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.(உ-121)

# படகில் சென்ற பயணிகளை கடற்படை மறித்து மிரட்டியது

நெடுந்தீவு குறிகட்டுவான் போக்குவரத்தில் ஈடுபட்ட பயணிகள் படகினை கடற்படையினர் கடுமையாக சோதனையிட்டதுடன் பயணிகளையும் அச்சுறுத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் மு.ப.10.00 மணிக்கு குறிகட்டுவானிலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு நெடுந்தீவு நோக்கி சென்றுகொண்டிருந்த பயணிகள் படகினை நடுக்கடலில் வழி மறித்த கடற்படையினர், படகினை சோதனையிட்டதுடன் பயணிகளையும் மிரட்டியுள்ளதாகவும், இனி இவ்வாறு படகுகளில் செல்லும் போது தேசிய அடையாள அட்டைகளையும் எடுத்து வருமாறு மக்களை அச்சுறுத்தியுள்ளதாகவும், மக்கள் தெரிவித்துள்ளனர்.

நெடுந்தீவில் கடற்படையினர் புதிதாக முகாம் ஒன்றை அமைப்பதற்காக அங்குள்ள அஞ்சலக வளாகத்தை துப்புரவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் எனவும் தெரியவருகிறது.

(உ-121,8)

# தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவையால் ஜூனில் 14,931 நோயாளிகள் பலன்

தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் கடந்த யூன் மாதம் 14ஆயிரத்து 931 பேருக்கு சிகிச்சை வழங்கப்பட்டது.

திலீபன் மருத்துவ சேவை நிலையங்களான ஆழியவளையில் ஆயிரத்து 942 பேரும், அளம்பிலில் ஆயிரத்து 819 பேரும், புங்குடுதீவில் ஆயிரத்து 731 பேரும், மாங்குளத்தில் ஆயிரத்து 703 பேரும், கற்சிலைமடுவில் ஆயிரத்து 509 பேரும், புளியங்குளத்தில் ஆயிரத்து 549 பேரும், பூநகரியில் ஆயிரத்து 426 பேரும், ஐயன்கன்குளத்தில் ஆயிரத்து 379 பேரும்,

அடம்பனில் ஆயிரத்து 82 பேரும், நைனாமடுவில் 791 பேருமாக மொத்தம் 14 ஆயிரத்து 931 பேர் கடந்த யூன் மாதம் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவர்களில் சுவாசப்பாதை தொற்றினால் 2ஆயிரத்து 640 பேரும், வைரஸ் காய்ச்சலினால் 3ஆயிரத்து 107 பேரும், நாரிக்குத்தினால் ஆயிரத்து 485 பேரும், விபத்துக் காயங்களினால் ஆயிரத்து 204 பேரும், தோல் நோயினால் 808 பேரும், குருதிச்சோகையினால் 430 பேரும், தொய்வினால் 396 பேரும், மண்டைபீனிசத்தினால் 410 பேரும், குடற்புண்ணினால் 266 பேரும்,

உயர் குருதி அமுக்கத்தினால் 264 பேரும், வயிற்றோட்டத்தினால் 245 பேரும், பல்நோயினால் 234 பேரும், ஒவ்வாமையினால் 214 பேரும், காதுத் தொற்றினால் 162 பேரும், சிறுநீர் வளித்தொற்றினால் 116பேரும், நாய்க்கடியினால் 146 பேரும், மலேரியா காய்ச் சலினால் 78 பேரும், கண் நோயினால் 73 பேரும், வலிப்பினால் 43 பேரும், இருதய நோயினால் 18 பேரும்,பாம் புக்கடியினால் 17 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

அத்தோடு வாரத்தில் ஓரிரு நாட்கள் நடமாடும் மருத்துவ சேவை மேற்கொள்ளப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுவது இங்கே குறிப்பிடத்தக்கது. (உ-121)

# மட்டு. சிறைச்சாலையில் கைத்துப்பாக்கி மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறைக்கூடத்துக்குள் இருந்து ஒரு கைத்துப்பாக்கி, கைக்குண்டுகள்-2, கையடக்கத் தொலைபேசி-2 என்பன மீட்கப்பட்டிருப்பதாக சிறைச்சாலை வட்டராங்கள் தெரிவித்தன.

மிகவும் பாதுகாப்பு மிக்க சிறைக்கூடத்திற்குள் கடுமையான சோதனைகளைத் தாண்டி எவ்வாறு ஆயுதங்கள் உள்ளே எடுத்துச்செல்லப்பட்டன என்பது குறித்து படைவட்டாரங்கள் தலையை பிய்க்கத் தொடங்கியுள்ளனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் பிற்பகல் மட்டக்களப்பு நீதவான் நீதிபதி ஏ.எச்.எம்.அஜ்மீர் சம்பவம் நடைபெற்ற சிறைக்கூடத்தை சென்று பார்வையிட்டதுடன், மூன்று கைதிகள் மற்றும் சிறைக்காவலர் ஒருவரது வாக்குமூலத்தையும் பெற்றுக் கொண்டபின் ஆட்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

நேற்று முன்தினம் மாலை சச்சு மாஸ்டரின் சடலம் குறுமன்வெளியிலுள்ள உறவினர்களிடம் கையளிக்கப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. மற்றும் தீபனுடய சடலம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேசமயம், சிறைச்சாலை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்து சிறைச்சாலையின் முன்பாகவுள்ள வைத்தியசாலை வீதியை மூடி பொலிஸார் தேடுதல் நடத்தினர். மற்றும் மட்டக்களப்பில் அதிகளவிலான பொலிஸாரும் படையினரும் வீதிக்கண்காணிப்பில் ஈடுபட்டதுடன் சோதனை நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். (உ-121)






வடமராட்சி லயன்ஸ் கழகத்தில் அண்மையில் இடம்பெற்ற பதவியேற்பு விழாவை லயன்ஸ்கழக மாவட்ட இணைப்பாளர் லயன் டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைப்பதனையும் புதிய தலைவர் லயன் எம்.தர்மலிங்கத்திற்கு முன்னாள் தலைவர் லயன் எஸ்.கதிரமலை பதக்கம் அணிவித்துக் கௌரவிப்பதனையும் படங்களில் காணலாம். படங்கள்:பரு.நிருபர்

# தகவல்கள் பெறும் உரிமையை உத்தரவாதப்படுத்த சட்டமூலம்

ஒருங்கிணைந்த எதிர்க்கட்சி சமர்ப்பிக்கும்



# உத்தரவாதப்படுத்த சட்டமூலம்

## ஒருங்கிணைந்த எதிர்க்கட்சி சமர்ப்பிக்கும்

(கொழும்பு)

தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் உரிமையை உத்தரவாதப்படுத்துவதற்காக சட்டமூலம் ஒன்றைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு ஒருங்கிணைந்த எதிர்க் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

ரூபவாகினிக் கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், லேக்கவுஸ் நிறுவனம் ஆகியவை தொடர்பாகவிருக்கும் சட்டத்திலும் திருத்தங்களை முன்வைக்க இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற ஒருங்கிணைந்த எதிர்க் கட்சிகளின் செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாகினிக் கூட்டுத்தாபனம் ஆகியன தொடர்பாகவும் இச்சட்ட மூலத்தில் பணிப்பாளர் சபையின் மூவரை அமைச்சர் நியமிப்பார். அரசியல் யாப்புச் சபையின் அனுமதியுடன் தலைவர் மற்றும் ஏனைய இருவர் நியமிக்கப்படுவர். இதைத் தவிர மேலும் நால்வரை அரசியல் யாப்புச்சபை நியமிக்கும்.

பொதுமக்களுடன் பேச்சுவார்த்தை நடாத்திய பின்பே இச்சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நாம் தீர்மானித்துள்ளோம்.

பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த பின்னர் அதனை நிறைவேற்றிக் கொள்ள தீர்மானித்துள்ளோம். அனைத்துக் கட்சிகளும் இதனை நிறைவேற்றுவதற்கு இணங்கியுள்ளன. இதனை நிறைவேற்றிக் கொள்வதற்கு அவசியமான பெரும்பான்மை உள்ளது என்று ரணில் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-121)

# சைக்கிளில் வந்த இளைஞர் குழு பஸ் நிலையத்தில் ரௌடித்தனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு 7.30மணியளவில் சைக்கிளில் வந்த இளைஞர் குழுவொன்று பஸ் நிலையப் பகுதியில் தாறுமாறாக சைக்கிளை ஓட்டி பயணிகளுக்கும் பஸ் சாரதிகளுக்கும் இடையூறை ஏற்படுத்தியுள்ளது.

பின்னர் தகாத வார்த்தைகளால் அங்கு நின்றவர்களை வசைபாடிவிட்டு அக் கும்பல் சென்றுள்ளது.

இவர்கள் நிறைவெறியில் கலைக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இச் சம்பவத்தினால் அங்கு நின்ற பயணிகள் பெரிதும் அசௌகரியப்பட்டுள்ளார்கள்.

நாட்டின் தூண்களாக விளங்க வேண்டிய இளைஞர் சமுதாயம் இவ்வாறு தான்தோன்றித்தனமாக பொறுப்பற்ற முறையில் நடந்துகொள்வது குறித்து அங்கிருந்த சமூக நலன் விரும்பிகள் கவலை தெரிவித்தனர்.

(உ-8)

## புதிய செயற்றிட்டங்கள்

(கொழும்பு)


இலங்கை முதலீட்டுச்சபை பல புதிய செயற்றிட்டங்களை முன்னெடுத்துச்செல்லத் திட்டமிட்டுள்ளது.

இதன் கீழ் இலங்கையும், இத்தாலியும் கூட்டாகச் செயற்படுத்தவிருக்கும் புதிய திட்டத்தின் மூலம் ஏற்றுமதி ஆடைகளுக்கான நூல்கள் உற்பத்தியாக்கப்படவுள்ளன.

இதற்கான முதலீட்டுத் தொகை 800ஆயிரம் மில்லியன் ரூபாவாகும்.

இவைதவிர, இலங்கையும் இந்தியாவும் கணனி வன்பொருள் திட்டத்திற்காக முதலீட்டுத் திட்டமொன்றைக் கூட்டாக முன்வைக்கத்திட்டமிட்டுள்ளன.

(உ-10)





இல. 86, பலாலி வீதியில் அமைந்துள்ள ஸ்ரீகாயத்திரி காம கோடி பீடத்தில் பிரதிஷ்டை செய்வதற்காக டாக்டர் கருணாகரனால் வழங்கப்பட்ட பஞ்சமுக காயத்திரி அம்பாளின் அழகுறு தோற்றத்தை முதலாவது படத்திலும்,
அம்பாளுடன் சுவாமிகள் மற்றும் அடியார்கள் ஆகியோர் நிற்பதை மறுபடத்திலும் காணலாம்.

# பிரிட்டனின் இடைத் தேர்தலில் ரோனி பிளேயருக்குத் தோல்வி

(லண்டன்)

பிரிட்டனில் இரண்டு தொகுதிகளுக்கு கடந்த வெள்ளிக் கிழமை நடைபெற்ற பாராளுமன்ற இடைத்தேர்தலில் ரோனி பிளேயரின் ஆளும் தொழிற்கட்சி, ஒன்றில் தோல்வியடைந்து மற்றென்றில் மயிரிழையில் தப்பியது.




லீசெஷ்டயரின் தென்பிராந்தியத்திற்கான தேர்தலில் எதிர்க்கட்சியான லிபரல் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் பர்ம்ஜித்சிங்கில் 10,274 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். இவர் ஆளும் தொழிற்கட்சி வேட்பாளரை 1,600 வாக்குகள் வித்தியாசத்தில் வென்றார். 2001ம் ஆண்டு பொதுத் தேர்தலில் பிளேயரின் தொழிற்கட்சி 13,000வாக்குகள் வித்தியாசத்தில் இங்கு வெற்றி பெற்றிருந்தது.

பேர் மிங்ஹாம் தொகுதியின் ஹொஜ்ஹில் தொகுதியில் பிளேயரின் ஆளும் தொழிற்கட்சி வேட்பாளர் 460 மேலதிக வாக்குகளால் வென்றார். 2001ம் ஆண்டு பொதுத் தேர்தலில் தொழிற்கட்சி 11,000வாக்குகள் வித்தியாசத்தில் இங்கு வெற்றி பெற்றிருந்தது.

பிளேயரின் ஈராக் தொடர்பான உளவுத் தகவல்கள் பிழையானவை என்று கடந்த புதன்கிழமை வெளியிடப்பட்ட அறிக்கையைத் தொடர்ந்து அவர் மீதான பொது நம்பிக்கை சரிவடைந்துள்ளது என்றும் அவர் உடனடியாக மன்னிப்புக் கோர வேண்டு மென்றும் பெரும்பான்மையான முஸ்லிம்களைக் கொண்ட லீசெஷ்டயரில் வெற்றி பெற்ற சிங் கூறினார். (யே)

# 60 ஆயிரம் தொழிலாளர் ஜேர்மனியில் ஆர்ப்பாட்டம்

(ஃபிராங்போர்ட்)

உலகின் முன்னணி கார் உற்பத்தி நிறுவனமும் மேர்சிடிஸ் பென்ஸ், வொக்ஸ்வகன்,



லாண்ட்ரோவர், ஜப்பானின் மிற்சுபிஸி ஆகிய மோட்டார் நிறுவனங்களின் பிரதான உரிமையாளருமான ஜேர்மனியின் டெயில்மர் கிறிஸ்லர் நிறுவனத்திற்கெதிராக சுமார் 60 ஆயிரம் தொழிலாளர்கள் ஜேர்மனியில் மாபெரும் ஆர்ப்பாட்டமொன்றை நடாத்தினர்.

உலகப்புகழ் பெற்ற ஜேர்மன் மேட்டார் நிறுவனமான டெயில்மர் கிறிஸ்லர், தனது செலவுகளைக் குறைத்து வருடந்தோறும் 500மில்லியன் யூரோக்களைச் சேமிப்பதற்குத் (618 மில்லியன் அமெரிக்க டொலர்) திட்டமிட்டுள்ளது. இதற்காக சுமார் 6000பேரை வேலையிலிருந்து நீக்கவும் அது திட்டமிட்டுள்ளது.


உலகப் புகழ் பெற்ற மேர்சிடிஸ் பென்ஸ் கார்களை உற்பத்திசெய்து இன்று வரை லாபகரமாக இயங்கி வரும் டெயில்மர், கடந்த வருடத்தில் ஜேர்மனியின் வொக்ஸ்வகன் கார் நிறுவனத்தையும் பிரிட்டனின் லாண்ட்ரோவர் நிறுவனத்தையும் விலைக்கு வாங்கியது. இவ் வருட ஆரம்பத்தில் மிகுந்த நிதி நெருக்கடியை எதிர் நோக்கிய ஜப்பானின் மிற்சுபிஸி நிறுவனத்தின் பெரும் பங்கையும் அது இப்பொழுது உள்வாங்கியுள்ளது.

இதன் அராஜகப்போக்குக்கு எதிராக மேர்சிடிஸ் பென்ஸின் ஒன்று மையங்களின் சுமார் 60 ஆயிரம் தொழிலாளர் தொடங்கியுள்ள போராட்டத்தால் நாள் ஒன்றுக்கு சுமார் 800 வாகனங்கள் உற்பத்தி செய்யப்படுவது தடைப்பட்டுள்ளது. (யே)

# யூலை 1958 ஈராக் புரட்சி நினைவு கூரப்படாத நிகழ்வு

(பக்தாத்)

1958ம் ஆண்டு யூலை 12ம் திகதி ஈராக்கின் அமெரிக்கா



சார்பான அரச பரம்பரையின் ஆட்சி இராணுவ சதிப் புரட்சி மூலம் தூக்கியெறியப்பட்டது. யூலை 12ல் இது தொடர்பில் எந்த நிகழ்ச்சிகளும் ஈராக் கில் நடைபெற வில்லை என் பது குறிப்பிடத்தக்கது.

இப் புரட்சியை மேற்கொண்டு பின்நாளில் ஈராக்கின் பிரதமராக விளங்கியவர் அப்துல் கரீம் அல்-காசிம் ஆவார். ஃபாத் கட்சியின் தலைவராக விளங்கிய இவர், தற்பொழுது ஈராக்கில் கைதியாக இருக்கும் சதாம் ஹுசெய்னின் நெருங்கிய நண்பராவார். பிறந்த நாளில் சதாம் ஃபாத கட்சியைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

மன்னர் பய்ஸல் உட்பட அரச குடும்பத்தினர் அத்தனை பேரும இப்புரட்சியில் கொல்லப்பட்டனர். மன்னர் பய்ஸலின் மைத்துனரான யோர்தான் மன்னர் ஹுசைசெய்ன் ஈராக்கிற்கெதிராக அமெரிக்கப் படைகளை வரவழைத்த போது, அது அப்போதைய உலக வல்லரசாக மறுபுறத்தில் விளங்கிய சோவியத்தின் தலையீட்டுக்கு வழிவகுத்தது. (யே)

# சோனி-எரிக்ஷன் நிறுவனம் சந்தையில் அதிக இலாபம்

(ஸ்ரொக்கோம்)

ஜப்பானின் சோனிகோப்பரேஷனும், சுவீடனின் எரிக்ஷன் நிறுவனமும் இணைந்து வெளியிடும் சோனி-எரிக்ஷன் கையடக்கத் தொலைபேசிகள் உலக சந்தையில் அதிக இலாபம் ஈட்டுபவையாக அறிவிக்கப்பட்டுள்ளன.



உலகின் முதல் ஸ்தாபனத திலிருக்கும் நொக்கியா மற்றும் முன்னணிப் போட்டியாளர்களான மோடடரொல்லா, சம்சுங், எல்ஜி போன்ற கையடகத் தொலைபேசி நிறுவனங்களின் கடும் போட்டியின் மததியில் சோனி எரிக்ஷன் கமராத் தொலை பேசிகளுக்கு அதிக கேள்வி எழுந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த வருடத்தின் இரண்டாவது தவணையில் மட்டும் இவ்விணை நிறுவனங்கள் 113 மில்லியன் யூரோக்களை (139.8 மில்லியன் டொலர்) இலாபமாகப் பெற்றுள்ளன.இது கடந்த வருடத்தின் இதேகாலப் பகுதியல் ஏற்பட்ட 102 மில்லியன் யூரோ இழப்பிற்கு மிகவும் மாறுபட்டதென்று அறிவிக்கப்படுகிறது. (யே)

WORLD NEWS
உலகத் தரிசனம்



தையும் விலைக்கு வாங்கியது. இவ் வருட ஆரம்பத்தில் மிகுந்த நிதி நெருக்கடியை எதிர் நோக்கிய ஜப்பானின் மிற்சுபிஸி நிறுவனத்தின் பெரும் பங்கையும் அது இப்பொழுது உள்வாங்கியுள்ளது.

இதன் அராஜகப்போக்குக்கு எதிராக மேர்சிடிஸ் பென்ஸின் ஒன்று மையங்களின் சுமார் 60 ஆயிரம் தொழிலாளர் தொடங்கியுள்ள போராட்டத்தால் நாள் ஒன்றுக்கு சுமார் 800 வாகனங்கள் உற்பத்தி செய்யப்படுவது தடைப்பட்டுள்ளது.

(யே)

(139.8 மில்லியன் டொலர்) இலாபமாகப் பெற்றுள்ளன.இது கடந்த வருடத்தின் இதேகாலப் பகுதியில் ஏற்பட்ட 102 மில்லியன் யூரோ இழப்பிற்கு மிகவும் மாறுபட்டதென்று அறிவிக்கப்படுகிறது.

(யே)

## WORLD NEWS
## உலகத் தரிசனம்

# சகோதரர்களுக்கு விடுதலை தாயார் இன்னும் சிறையில்

(பொகோத்தா- கொலம்பியா)

மூன்று வருடங்களுக்கு முன்பு கொலம்பிய புரட்சிகர இராணுவம என்று அழைக்கப்படும் தீவிரவாத அமைப்பினால் கைதுசெய்யப்பட்ட இரண்டு சகோதரர்கள் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டனர். அவர்களது தாயார் இன்னமும் விடுவிக்கப்படவில்லை.

கொலம்பிய பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட



இவர்களின் தாயாரும் அவரது புதல்வர்களும் மேற்படி அமைப்பால் கைது செய்யப்பட்டு மூன்று வருடங்களின் பின் குறிப்பிட்ட தொகைப் பணத்திற்கு விடுதலை செய்யப்பட்டபோதும் அரசியல் வாதியான தாயார் விடுதலை செய்யப்படவில்லை .


இவர்களுடன் கடத்தப்பட்ட நூற்றுக்குமதிகமான அரசியல் வாதிகள், பொலிஸ் உயரதிகாரிகள் மற்றும்அரச உயரதிகாரிகள் மேற்படி தீவிரவாதிகளின் பிடியில் இன்னும் இருக்கின்றனர். தமது உறுப்பினர்களை அரசாங்கம் விடுதலை செய்கின்ற பட்சத்தில் மாத்திரமே மேற்படி கைதிகள் விடுவிக்கப்படுவர் என்று அவ்வமைப்பு அறிவித்துள்ளது.

(யே)

# எகிப்திய, பிலிப்பைன்ஸ் கைதிகளை விடுவிக்கப் புதிய நிபந்தனை

(பக்தாத்)

ஆயுததாரிகளால் பணயக்கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் எகிப்திய மற்றும் பிலிப்பைன்ஸ் கைதிகள் இருவரையும் விடுவிப்பதற்குப் புதிய நிபந்தனைகள் விதிக் கப்பட்டிருக்கின்றது.





பிலிப்பைன்ஸ் கைதியான அஞ்செலோடி லா டுரூஸ் விடுவிக்கப்பட வேண்டுமானால் இம் மாத இறுதிக்குள் பிலிப்பைன்ஸ் படைகள் அனைத்தும் ஈராக்கை விட்டு வெளியேறி விட வேண்டும் என்று ஆயுததாரிகள் அறிவித்துள்ளனர். பிலிப்பைன்ஸ் இராணுவம் ஏற்கனவே வெளியேறத் தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மறுபுறத்தில் ஃபயிஸல்- அல் நஹெயிட் கம்பனியின் சாரதியான எகிப்திய முஸ்லிம் ஒருவரை பணயம் பிடித்திருக்கும் ஆயுததாரிகள் 48 மணித்தியாலங்களுக்குள் அக் கம்பனி ஈராக்கை விட்டு வெளியேறாவிடின் கைதியின் தலை கொய்யப்படும் என்று அறிவித்துள்ளனர். சவுதி அரேபியக் கம்பனியான அல்- நஹெயிட் ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படைகளுக்குப் பெற்றோலியப் பொருட்களை விநியோகம் செய்கின்றது.

இதேவேளை பிலிப்பைன்ஸ் கைதி தனது மனைவி மற்றும் பிள்ளைகளுக்குச் செய்தி அனுப்பி வைத்திருப்பதுடன் ஜனாதிபதி குளோரியாவுக்கும் நன்றி தெரிவித்துள்ளார். ஆனால் மேற்குலக அரசாங்கங்கள் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியின் முடிவைக் கண்டித்துள்ள அதேவேளை உள்நாட்டில் ஆர்ப்பாட்டங்கள் தலையெடுத்துள்ளன. பிலிப்பைன்ஸ் இராணுவத்தை மீளப் பெறுமாறு அவர்கள் கோருகின்றார்கள்.

(யே)

பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி உறும் - குறள்

# வலம்புரி

## அரசுக்கு சாதகமாக மௌனம் காக்கும் சர்வதேசம்

இலங்கையில் இப்போது சமாதானமும் இல்லை; சண்டையும் இல்லை என்ற நிலைமை காணப்படுகின்றது. சண்டையும் சமாதானமுமற்ற நிலைமையானது மீண்டும் போருக்கு வழிவகுக்குமேயொழிய அது சமாதானத்துக்கு வாய்ப்பளிக்காது என்பது உணரப்படவேண்டிய விடயம்.

விடுதலைப்புலிகளுடன் யுத்தநிறுத்த உடன்படிக்கை செய்த ஐக்கியதேசிய முன்னணி அரசு உடன்படிக்கை செய்து மூன்று மாத காலத்திற்குள் தமிழர் தாயகத்தில் இயல்பு வாழ்க்கையை தோற்றுவிப்பதென உறுதியளித்திருந்தது.

எனினும் அரசின் உறுதிமொழி நிறைவுசெய்யப்படாமையினால் யுத்த அனர்த்தத்தினால் இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் மீண்டும் தமது சொந்த மண்ணில் வாழ முடியாமல் அகதிமுகாம்களிலும், இரவல் வீடுகளிலும் வாழ்கின்றனர்.

இவ்வாறு சொந்த மண்ணிலேயே "அகதி" என்ற பதவியோடு வாழ்கின்ற பரிதாபம் நீண்டு செல்வது குறித்து சர்வதேச சமூகம் மௌனம் சாதிப்பது ஆச்சரியத்துக்குரியது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடுகளில் இலங்கையில் விரைவில் சமாதானம் ஏற்படவேண்டும் எனக் கேட்டுக்கொண்ட அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகள் சமாதான வழிக்கு வருமாறு விடுதலைப்புலிகளுக்கு அழுத்தம் கொடுத்தனர். ஏற்கனவே சமாதான முயற்சியை வரவேற்று அரசுடன் யுத்தநிறுத்த உடன்படிக்கையை செய்துகொண்ட விடுதலைப்புலிகளை சமாதான முயற்சிக்கு ஒத்துழைக்குமாறு கேட்பதில் எந்தளவுதூரம் நியாயம் உள்ளது என்பது ஆராயப்படவேண்டிய விடயமாகும்.

இலங்கை நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த சர்வதேச சமூகம் விரும்புமாயின், சமாதானத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடுமாறு அரசிற்கே அழுத்தம் கொடுக்கவேண்டும்.

ஆனால் கடந்தகால நடைமுறை அதுவன்று. சமாதானத்திற்கு அரசு ஆதரவளிப்பது போலவும், அதற்கு விடுதலைப்புலிகளே எதிர்ப்புப் போலவும், சர்வதேச நாடுகளின் கருத்துக்களும், விமர்சனங்களும் அமைந்திருந்தன.

அதாவது அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய இடங்களில் நடந்த இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் சமாதான முயற்சிக்கு ஆதரவு வழங்குமாறு விடுதலைப்புலிகளை கேட்டுக்கொண்ட சர்வதேச நாடுகள், அதே கோரிக்கையை இலங்கை அரசிடம் கேட்பதற்கு மறந்து போயின.

இந் நிலைமை தற்காலிகமானதெனக் கருதிக் கொண்ட தமிழ்மக்கள் தம்மை தேற்றினாலும் அந் நிலைமை தொடர்வது வேதனைக்குரியதாகும்.

# கன்னித் தமிழ் வளர்த்த எழுவர் கம்பன் விழாவில் கௌரவம் பெறுவர்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு கம்பன் கழகம் கடந்த 15ஆம் திகதி முதல் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடத்திவரும் கம்பன் விழாவின் இறுதி நாளான நாளை ஞாயிற்றுக்கிழமை ஆன்றோர் கௌரவிப்பு இடம்பெறவுள்ளது.

புதுவை கம்பன் கழகத் தலைவர் ந.கோவிந்தசாமி கம்பகாவலர் விருது வழங்கி கௌரவிக்கப்படுவதுடன், பண்டிதர் க.பொ. இரத்தினம், பேராசிரியர் எம்.சிவசூரியா, எஸ் சுப்பிரமணியம் செட்டியார், பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி க.குணராசா, பேராசிரியர் ம.செ.மூக்கையா ஆகியோர் அன்றைய தினம் கௌரவம் பெறும் சான்றோராவர்.



**ந.கோவிந்தசாமி முதலியார்**
**(தலைவர், புதுவை கம்பன் கழகம்)**
*வெள்ளைச் சிரிப்பு விளைகின்ற நல்லறிவு
கள்ளம் சிறிதுமிலா கனிவான மென்மனது
வெள்ளம் எனப் பொங்கும் வீறான இசை அறிவு
உள்ளமதைக் கம்பனிடம் ஒப்படைத்த பெருவடிவு*

**பண்டிதர் க.பொ.இரத்தினம்**
**(மூத்த தமிழறிஞர்)**
*வளளுவர் தம் பெரும் புகழை,*



*வானோங்க வளர்தெடுத்த,
நல்லபெரும் தமிழ்ப் புலவர்.
நாட்டுக்காய்த் தினம் உழைத்த,
வல்ல பெரும் தமிழ்ப் புலவர்.
வளமோங்கும் நற் புலவர்.
எல்லோரும் போற்றுகிற,
ஈழத்து முது புலவர்.*

**பேராசிரியர் எம்.சிவசூரியா**
**(வேந்தர் யாழ்.பல்கலைக்கழகம்)**
*போர்க் காலம் தன்னில்,*



*புகழ் விற்று ஓடாமல்,
ஊர்க்காவல் செய்தெங்கள்,
ஊனம் தவிர்த்த மகன்.
சீரோங்கும் நல்லறிவால்,
செகமெலாம் புகழ்கொண்ட
பேரான பல்கலையின்
பெருவேந்தன் பேராளன்.*

**எஸ்.சுப்பிரமணிய செட்டியார்**
**(அறங்காவலர், புதிய கதிரேசன் கோயில்)**



*செட்டிநாட்டு ஏந்தல்.
எம் சீரான ஈழத்தில்
வட்டி சேர்த்தறம் வளர்க்கும்
வள்ளல் பெருந்தகையர்.
மட்டில்லா நேசத்தால்
மற்றவரை உயர்த்துகிற
செட்டியார். அறங்காவல்
செய்யும் பெரும் புகழார்.*

**பேராசிரியர் அ.சண்முகதாஸ்**
**(தமிழ்த் துறைத் தலைவர், யாழ்.பல்கலைக்கழகம்)**
*கிழக்கிலங்கை தந்த மகன்.*



*கேண்மையினால் மற்றவரை;
துலக்கமுறச் செய்கின்ற,
தூய தமிழ்ப் புலவன்.
கலக்கமுறும் மழலையரை,
காத்து அறம் வளர்த்து,
சளைக்காமல் உழைக்கின்ற
தருக்கில்லாத தண்ணளியோன்.*

**கலாநிதி க. குணராசா**
**(செங்கை ஆழியான், எழுத்தாளர்)**



*காட்டாறு போன்ற,
கதிகொண்ட எழுத்தாலே,
நாட்டின் புகழ் உயர்த்தும்
நல்ல படைப்பாளன்.
நீட்டி முழக்காது
நின்று செயல் புரியும்
வாட்டமிலா உழைப்பாளன்.
வளம் பொங்கும் எழுத்தாளன்.*

**பேராசிரியர் ம.செ.மூக்கையா**
**(புவியியற்றுறை, பேராதனைப் பல்கலைக்கழகம)**



*மலை முகட்டிலே பிறந்து,
மங்காத ஆளுமையால்,
நிலைபெற்ற புகழ்கொண்ட
நிமிர்ந்த அறிவாளன்,
விலையில்லா நல்லறிவை,
விதைத்தேதான் பல்கலையில்,
உழைத்தோங்கி ஓய்வுற்ற
ஓங்கும் துணைவேந்தன்*

# எயிட்ஸ் நோயின் தாக்கம் யாழ்.மாவட்டத்தில் அதிகம்

### வவு.பிரதி சுகாதாரப் பணிப்பாளர் தகவல்

(வவுனியா)

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 20 பேர் எச்.ஐ.வி தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர். இது சனத்தொகையுடன் ஒப்பிடும்போது மிகவும் அதிகமானதாகும் என்று வவுனியா மாவட்ட பிரதி சுகாதாரப் பணிப்பாளர் ஏ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடகிழக்கு மாகாணத்தில் எயிட்ஸிற்கு இலக்கானவர்களாக யாழ்ப்பாணத்தில் 20 பேரும், மட்டக்களப்பில் 7 பேரும், திருகோணமலையில் 6 பேரும், முல்லைத்தீவில் 2 பேரும், அம்பாறையில் 5 பேரும், கிளிநொச்சியில் 2 பேரும், வவுனியாவில் ஒருவரும் இனம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களைவிட கொழும்பில் 204 பேரும், கம்பஹாவில் 84 பேரும், களுத்துறையில் 34 பேரும், குருநாகலையில் 27 பேரும் புத்தளத்தில் 14பேரும், கேகாலையில் 12பேரும் இரத்தினபுரியில் 4 பேரும், காலியில் 15 பேரும், மாத்தறையில் 8 பேரும் நுவரேலியாவில் 4 பேரும், அனுராதபுரத்தில் 7 பேரும், பொலநறுவையில் 2 பேரும், மொனராகலையில் 2 பேரும், புத்தலையில் 4 பேரும்,ஏனைய இடங்களில் இருந்து 25 பேரும் இனம் காணப்பட்டுள்ளனர் என்று வவுனியா மாவட்ட பிரதி சுகாதாரப் பணிப்பாளர் ஏ. கேதீஸ்வரன் மேலும்தெரிவித்துள்ளார். (உ)

# படையினரின் உதவியால் பாலர் பாடசாலை திறப்பு

(பலாலி)

இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தும், பாதுகாப்புப் படையினரின் திட்டத்தின் கீழ் நாவற்குழி பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள சமாதான கிராமத்தைப் பார்வையிடுவதற்காக,யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் எம்.டி.எஸ் சந்திரபால 2004.07.06 ம் திகதி விஜயம் ஒன்றை மேற்கொண்ட வேளை அக்கிராமத்தில் பாலர் பாடசாலை ஆரம்பிப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டது.

இப்பாடசாலைக்குத் தேவையான கதிரை, மேசை மற்றும் வேறு உபகரணங்கள், யாழ். தளபதி மூலம் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

கைதடி நாவற்குழியில் அமைக்கப்பட்டுள்ள சமாதான கிராமத்தில் 52 வது சேனையக சேனாதிபதி பிரிகேடியர் திஸ்ஸ ஜயவர்த்தனவினால் மேற்படி பாலர் பாடசாலை மாணவர்கட்கு இனிப்புப் பண்டங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம்.



ஆதரவு வழங்குமாறு விடுதலைப்புலிகளை கேட்டுக் கொண்ட சர்வதேச நாடுகள், அதே கோரிக்கையை இலங்கை அரசிடம் கேட்பதற்கு மறந்து போயின.

இந் நிலைமை தற்காலிகமானதெனக் கருதிக் கொண்ட தமிழ்மக்கள் தம்மை தேற்றினாலும் அந் நிலைமை தொடர்வது வேதனைக்குரியதாகும். குறிப்பாக ஐக்கிய தேசிய முன்னணி அரசு விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை மேற்கொண்டவேளை அதனைக் குழப்பியடிக்கும் நோக்கில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அந்த அரசைக் கலைத்தார்.

அரசின் சமாதான முயற்சி நாட்டிற்கு ஆபத்தாக அமைகின்றதெனக் கூறி ஆட்சியைக் கலைத்த போது சர்வதேச நாடுகள் வாய்மூடி மௌனிகளாக இருந்தனர்.

ஆட்சியைக் கலைப்பது சமாதான முயற்சியைப் பாதிக்கும் என அமெரிக்காவோ அன்றி ஜப்பானோ கூறவில்லை எனில் அவை இலங்கைக்கு பயந்தன்று. மாறாக இலங்கை அரசுக்கு ஏதோ ஒரு வகையில் தாம் ஆதரவாக இருக்கவேண்டும் என்பதே அவற்றின் நோக்கமாகும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஐக்கிய தேசிய முன்னணி அரசைக் கலைத்தபோது அது இலங்கையின் சட்ட திட்டங்களுக்கு அமைவானது - அதில் நாம் தலையிட முடியாது எனக் கூறி அமெரிக்காவும், ஜப்பானும் தப்பிக்கொண்டன.

இலங்கை அரசின் விடயத்தில் சட்ட திட்டங்களை கவனிக்கும் மேற்போந்த நாடுகள் இலங்கை நாட்டுப் பிரஜைகளான தமிழ் மக்களின் தாயகப் பகுதி மற்றும் குடியிருப்புக்கள் உயர்பாதுகாப்பு வலயம் என்கின்ற பெயரில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமை குறித்து எதுவுமே பேசவில்லை. இப்போதும் அதே மௌனத்தை அமெரிக்காவும், ஜப்பானும் கடைப்பிடிப்பது ஏன்?

தினபுரியில் 4 பேரும், காலியில் 15 பேரும், மாத்தறையில் 8 பேரும் நுவரேலியாவில் 4 பேரும், அனுராதபுரத்தில் 7 பேரும், பொலநறுவையில் 2 பேரும், மொனராகலையில் 2 பேரும், புத்தலையில் 4 பேரும்,ஏனைய இடங்களில் இருந்து 25 பேரும் இனம் காணப்பட்டுள்ளனர் என்று வவுனியா மாவட்ட பிரதி சுகாதாரப் பணிப்பாளர் ஏ. கேதீஸ்வரன் மேலும்தெரிவித்துள்ளார். (உ)

வலி.தென்மேற்கில்

## கட்டாக்காலி நாய்களை ஒழிக்க பெருமெடுப்பில் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கட்டாக்காலி நாய்கள் முற்றாகப் பிடித்தது அழிக்கப்படவுள்ளன.

பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 28 கிராம அலுவலர் பிரிவுகளிலும் கிராமம் கிராமமாகச் சென்று வண்டில் மூலம் நாய்களைப் பிடித்து அழிப்பதற்கான நடவடிக்கையினை வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் மேற்கொண்டுள்ளார்.

எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமை முதல் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதிவரையான காலப் பகுதியில் இந்த நடவடிக்கை இடம்பெறவுள்ளது.

இந்த நாட்களில் வளர்ப்பு நாய்களைக் கட்டி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ)

ௐ தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

பரம்பொருள் ஒன்று. அது மாறுபடாதது. இனமாற்றம் இல்லை. மனமே உலகம்முழுவதையும் நம்முன் நிறுத்துகிறது. ஆகவே ஆசை அறுவதும் மனம் கரைந்து போவதும் முடிவாக ஒளி பெறுவதும் எல்லாம் ஒருங்கே நிகழ்கின்றன.

சுவாமி விவேகானந்தர்



## முன்மாதிரிப் பரீட்சை

(கோப்பாய்)

யாழ்.வலயப் பாடசாலைகளில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன்கருதி வலய மட்டத்திலான முன்மாதிரிப் பரீட்சைகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ளன.

இப்பரீட்சைக்காக மாணவர்களிடமிருந்து கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாதென வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(உ-79)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் தபாற்கந்தோரின் எதிர்கால அமைவிடம் குறித்த கலந்துரையாடல் ஒன்று இன்று மு.ப 11மணிக்கு சுன்னாகம் கதிரைமலைச் சிவன் தேவஸ்தான மணி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.சிவாஜிலிங்கம் இந்த நிகழ்வில் சிறப்பு அதிதியாகப் பங்கேற்கவுள்ளார். (உ)

# அமெ.தூதரக அரசியல் செயலாளர் கோடி சி ரெய்லர் நேற்று யாழ் விஜயம்

## குடாநாட்டு நிலைமைகள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்தார்

(திருநெல்வேலி)

அமெரிக்க தூதுவராலயத்தின் இலங்கைக்கான அரசியல் செயலாளர் கோடி சி ரெய்லர் அம்மையார் நேற்றையதினம் யாழ். குடாநாட்டுக்கு வருகைதந்து குடாநாட்டு நிலைமைகள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்தார்.

நேற்றுக்காலை பலாலி பாதுகாப்பு படைத்தள தலைமையகத்தை வந்தடைந்த அவர் யாழ். குடாநாட்டில் பாதுகாப்பு நிலைமைகள் உள்ளிட்ட முக்கிய பல விடயங்கள் குறித்தும் படைத்தரப்பினருடன் கலந்துரையாடினார்.

இதனையடுத்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கத்தைச் சந்தித்து குடாநாட்டின் கல்வி நிலைமைகள் குறித்து கேட்டறிந்தார். இதன்போது இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்கு உட்பட்டுள்ள 101 பாடசாலைகள் இயங்காமல் முடங்கிக் கிடப்பது தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டது.

பின்னர் பிற்பகல் 2.30 மணியளவில் இவர் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பிரதிநிதிகளை மாட்டின் வீதியிலுள்ள மாவை சேனாதிராஜா எம்.பியின் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இச்சந்திப்பின்போது விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாக சபையை வழங்குவதற்கு அரசை வலியுறுத்தவேண்டும். இலங்கை இராணுவத்துக்கு அமெரிக்காவால் வழங்கப்படும் இராணுவ உதவிகள் மற்றும் ஆலோசனைகள் என்பன உடன் நிறுத்தப்படவேண்டும் என பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

அமெரிக்காவின் இத்தகைய உதவிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் சமபலத்தை கேள்விக்குறியாக்கவே மாற்றும் எனவும் இவை மீண்டுமோர் போருக்கே வழிசமைக்கும் எனவும் கூட்டமைப்பு பிரதிநிதிகளால் கோடி சி ரெய்லர் அம்மையாரிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

இதற்குப் பதிலளித்த கோடி சி ரெய்லர் சமாதான முயற்சிகள் வெற்றியடைந்து நிரந்தர சமாதானம் ஒன்று இலங்கையில் ஏற்படுவதையே அமெரிக்கா விரும்புகிறது. இவ்வாறான சமாதானத்திற்காக அமெரிக்கா அர்ப்பணிப்புடன் செயற்படுமென உறுதியளித்தார்.

இச்சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவனேசன், எம்.கே.சிவாஜிலிங்கம், ம.க.ஈழவேந்தன், திருமதி பத்மினி சிதம்பரநாதன், செ.கஜேந்திரன், ந.ரவிராஜ், மாவை சேனாதிராஜா ஆகியோர் கலந்துகொண்டனர். (சு-43,19)

### பார்வையாளர்...

இம்முடிவு எட்டப்பட்டுள்ளதாக பாராளுமன்றத்தின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார். எதிர்வரும் காலங்களில் பாராளுமன்றத்தின் அமர்வுகளைப் பொறுத்தே பார்வையாளர் கலரியை திறப்பதற்கான முடிவு எடுக்கப்படும். இருந்தபோதிலும் புதிதாக பதவியேற்கவுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் குடும்பத்தினர் அவர்களின் பதவிப் பிரமாணத்தின்போது பார்வையாளர் கலரிக்குள் அனுமதிக்கப்படுவார்களெனவும் பாராளுமன்றத்தின் பொதுச் செயலாளர் மேலும் கூறியுள்ளார். (சு)

### பாடசாலை சிறுவர்...

அந்தக் கட்டடத்தின் அருகில் உள்ள சத்துணவுக் கூடத்தில் சமையல் செய்த அடுப்பு தீ அந்தக் கூடத்தின் கூரையில் பற்றி எரிந்தது. அதிலிருந்து பரவிய தீ அருகிலிருந்த மூன்றாவது மாடியின் மேற்கூரையிலும் பரவியது. தீ பற்றியதை அறிந்த முதல் இரு தளங்களிலும் இருந்த உயர் வகுப்புக்களைச் சேர்ந்த மாணவிகள் அலறியடித்துக் கொண்டு வெளியே ஓடித் தப்பினர்.

அவர்களின் கூக்குரல் கேட்டதும் அருகில் இருந்தவர்கள் தீ அணைப்பு துறையினருக்கும் உயர் அதிகாரிகளுக்கும் தகவல் கொடுத்தனர். மேல் தளத்தில் சிக்கிக் கொண்ட சிறுவர்கள் அங்கிருந்து கீழே இறங்க முடியாமல் தவித்தனர்.

மூன்றாவது மாடியிலிருந்து கீழே இறங்குவதற்கு ஒரே ஒரு வழி மட்டும் இருந்ததால் சிறுவர்கள் பலரும் தீயில் சிக்கி உடல் கருகினார்கள். மேற் கூரையில் தீ பரவியதும் அக்கூரை அப்படியே மேல் தளத்தில் இருந்த குழந்தைகள் மீது விழுந்தது. இதனால் நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகள் பலியாகினர். பயங்கர தீக் காயங்களுடன் முப்பத்தைந்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் கும்பகோணம் அரசினர் மருத்துவமனைகளிலும், தனி

### கிழக்கில் சட்டத்தையும் ஒழுங்கையும்...

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் யுத்தநிறுத்த மீறல் சம்பவம் தொடர்பாக மக்கள் மிகுந்த கவலையும் அச்சமும் கொண்டுள்ளனர். எனினும் மட்டக்களப்பு மக்கள் எந்தவொரு தரப்பினர் மீதும் இதுவரை குற்றச்சாட்டுக்கள் எதனையும் சுமத்தவில்லை. ஆனால் மக்கள் மனதில் அமைதி இன்மை காணப்படுகின்றது.

இந் நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவதற்கு ஜனாதிபதி கடுமையான உத்தரவுகளை பாதுகாப்புப் படையினருக்கு பிறப்பித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் படுகொலைகள் போன்ற சம்பவங்கள் சமாதான நடவடிக்கைகளுக்கு இடையூறாக அமைகின்றது என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இதனைத் தடுப்பதற்கு இராணுவமும் பொலிசும் கூட்டாக செயற்பட்டு வருகின்றன. இது முன்னேற்றம் காணப்படும் என நம்புகிறேன்.

சமாதான முயற்சிகளில் அர்ப்பணிப்புடன் செயற்படும் ஜனாதிபதியின் கரத்தைப் பலப்படுத்தவே இந்த விஜயத்தை நான் மேற்கொண்டேன். எனவே இவ் விஜயத்தின் போது பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளேன். மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் இடம்பெறும் சம்பவங்களைப் போன்று மேலும் இடம்பெறாது பார்த்துக் கொள்வதில் முப்படைகளுக்கும் உறுதியான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவித்த ஜயந்த தனபால சமாதான செயற்பாடுகள் மீண்டும் தொடர இரு தரப்பும் அர்ப்பணிப்புடனும் விட்டுக்கொடுப்புடனும் நடந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கை தனக்கு உண்டு என்றும் கூறினார்.

சமாதான செயலகப் பணிப்பாளர் நாயகத்துடன் சிவில் நிர்வாக அதிகாரி பேர்டி பெரேரா சமாதான செயலக உதவிச் செயலாளர் சானக ஆகியோரும் மட்டக்களப்பு சென்றிருந்தனர். அங்கு சமயத் தலைவர்கள் பலரையும் சந்தித்து உரையாடினர். (ம-10-121)

# மீன்முள்ளுச் சிக்கியதில் குடும்பப் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

தொண்டையில் மீன்முள்ளுச் சிக்கிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குடும்பப் பெண் ஒருவர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்றையதினம் அங்கு மரணமானார்.

இளவாலை நல்லாயன் வீதியைச் சேர்ந்த எட்டுப் பிள்ளைகளின் தாயாரான திருமதி தேவராசா மரியஸ்ரெலா(வயது42) என்பவரே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

கடந்த வெள்ளியன்று வவுனியாவிலுள்ள தனது உறவினரது வீட்டில் உணவருந்திக் கொண்டிருந்தவேளை தொண்டையில் முள்ளுச் சிக்கியதாகவும் பின்னர் கடந்த ஞாயிறு அன்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று அங்கு மரணமானார். (உ-16)

### சேனாதிராஜா...

தித் திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்பிக்களான என்.ரவிராஜ், என்.கே.சிவாஜிலிங்கம், ஈழவேந்தன், எஸ்.சிவனேசன், திருமதி பத்மினி சிதம்பரநாதன், எஸ்.கஜேந்திரன் ஆகியோரும் யாழ்.அரச அதிபர் எஸ்.பத்மநாதன், மேலதிக அரச அதிபர் க.சிவசுவாமி, திட்டமிடல் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை, மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி.மகாலிங்கம், யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் எஸ்.சதுர்முகம் ஆகியோருடன் யாழ்.மாவட்ட பிரதேச செயலர்கள் மற்றும் அரச அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி. எம்.பியும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

இது இவ்வாறிருக்க யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுவுக்கு தலைவர் ஒருவரை ஜனாதிபதி இன்றுவரை நியமிக்காமையால் அரச அதிபர் தலைமையில் நடைபெறவிருந்த நேற்றைய கூட்டம் இறுதி நேரத்தில் மாவை சேனாதிராஜா எம்.பி தலைமையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-19,43)

### மட்டக்களப்பு...

செல்லப்பட்டது, கொலைக்குரிய காரணம், ஆயுதங்கள் சிறையினுள் எடுத்துச்செல்லப்பட உடந்தையானவர்கள் யார் என்பன குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை, சிறைச்சாலையினுள் இடம்பெற்ற இவ் அசம்பாவிதத்திற்கு சிறைச்சாலை அதிகாரிகளே பொறுப்பேற்க வேண்டுமென கிழக்கு மாகாணத்திற்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் நெவில் விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

எனினும், பொலிஸாரும் இது குறித்து தனியான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். அத்துடன் மட்டக்களப்பு சிறைச்சாலைகளின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (உ-4,62)

# இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ பாலகதிர்காம வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 31 ஆம் திகதி ஆலயத்தின் தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளன. (உ)

## கண்பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் சுன்னாகம் சபாபதி நலன்புரிநிலையம் மற்றும் சுன்னாகம் கண்ணகி நலன்புரி நிலையம் என்பன இணைந்து யாழ். சொலக்ஸ் நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்தும் இலவச கண் பரிசோதனை முகாம் இன்று சுன்னாகம் சபாபதி நலன்புரி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக்கண் பரிசோதனை முகாமில் பொதுமக்கள் யாவரும் கலந்து கொண்டு பயன்பெறலாமென கொக்குவில் லயன்ஸ் கழகத்தின் தலைவர் செல்வநாதன் அறிவித்துள்ளார். (சு)

### புலிகளுடன்...

பிரசாரங்கள் அரசிற்கு எவ்வித பாதிப்புக்களையும் ஏற்படுத்தாது என கதிர்காமர் கூறினார்.

கிழக்கு மாகாண நிலை குறித்து எடுத்துக்கூறியதுடன் நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதற்காக பிரிட்டன் அரசினால் 18 மில்லியன் பவுண்ஸ் வழங்கப்பட்டமைக்கு அவர் நன்றி தெரிவித்தார். (சு)



படியே மேல் தளத்தில் இருந்த குழந்தைகள் மீது விழுந்தது. இதனால் நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகள் பலியாகினர். பயங்கர தீக் காயங்களுடன் முப்பத்தைந்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் கும்பகோணம் அரசினர் மருத்துவமனைகளிலும், தனியார் மருத்துவமனைகளிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் பற்றி அறிந்ததும் கும்பகோணம் தஞ்சாவூர், திருவாவூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து தீயணைப்புப் படையினர் ஏராளமான வண்டிகளில் வந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதேவேளை தீ விபத்து இடம் பெற்ற இடத்தை தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேரில் சென்று பார்வையிட்டார்.

(ச)

## சமாதானப்...

மன்ற உறுப்பினர்களுடனும் ஜே.வி.பியினர் பேசவுள்ளனர்.

புலிகளிடம் இடைக்கால நிர்வாக சபையை வழங்குவது மக்களின் வாழ்வில் பாதகமான சூழ்நிலையை உருவாக்கும் என்பது மக்கள் விடுதலை முன்னணியின் கருத்து.

எனவே இடைக்கால நிர்வாக சபை என்ற நோக்கத்தைக் கைவிட்டு இறுதித்தீர்வை இலக்காகக் கொண்டு பேசுவதே சிறந்த வழி எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(உ-04-62-64)

பொலிசும் கூட்டாக செயற்பட்டு வருகின்றன. இது முன்னேற்றம் காணப்படும் என நம்புகிறேன்.

சமாதான முயற்சிகளில்

களப்பு சென்றிருந்தனர். அங்கு சமயத் தலைவர்கள் பலரையும் சந்தித்து உரையாடினர்.

(ம-10-121)

களை ஆரம்பித்துள்ளனர். அத்துடன் மட்டக்களப்பு சிறைச்சாலைகளின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (உ-4,62)

18 மில்லியன் பவுண்ஸ் வழங்கப்பட்டமைக்கு அவர் நன்றி தெரிவித்தார்.

(ச)






இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.07.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.